# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**மார்ச் 2003 ஜீவியம் 8 மலர் 11**

இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| லைப் டிவைன் | 18 |
| இம்மாதச் செய்தி | 24 |
| சாவித்ரி | 25 |
| நவம்பர் 24th சித்தி தினம் | 27 |
| அன்பர் கடிதம் | 35 |
| அன்பரும் நண்பரும் | 37 |
| அஜெண்டா | 48 |
| அபரிமிதமான செல்வம் | 50 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 57 |
| இலட்சியத் திருமணம் | 62 |


☆ ☆ ☆

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**751) நல்லவனாக இருப்பது அகந்தையற்ற நிலை. நல்லவன் எனப் பெயரெடுக்க விரும்புவது அகந்தை.**

*நல்லவனுக்கு அகந்தையில்லை.*

இயல்பாக நல்ல குணம், புத்திசாலித்தனம், திறமை, போன்ற உயர்ந்தவை பலருக்குண்டு. இதை அவர்கள் அறிவதும் உண்டு, அறியாமலிருப்பதும் உண்டு. அழகானவரை அனைவரும் கவனிப்பார்கள். சிறு வயதிலிருந்தே குழந்தையின் அழகை மற்றவர் அறிவார்கள், பேசுவார்கள். அழகாக இருப்பதால் அகந்தையில்லை. தான் அழகானவள் என்று நினைத்து அதற்கேற்ப நடக்க ஆரம்பித்தால், அது அழகின் வெளிப்பாடன்று, அகந்தையின் வெளிப்பாடு.

தான் எனும் முனைப்பில்லாமல் எந்த உயர்வுக்கும் போகலாம். எவ்வளவு பெரிய பதவியையும் வகிக்கலாம். அவை வளர்ந்தபடியிருக்கும். தொடர்ந்து வாய்ப்புகள் வந்து கொண்டேயிருக்கும். நடைமுறையில் இதுபோல் இருக்க முடிவதில்லை.

நல்லவர் என்பவருள் இதுபோன்றவர் உண்டு. இளம் வயதில் ambition வாழ்க்கையில் முன்னேற வேண்டும், பெரிய பட்டம் பெறவேண்டும், பெரிய உத்தியோகம் வகிக்கவேண்டும், அளவுகடந்த சொத்தை அன்றே பெறவேண்டும், தலைவனாக வேண்டும், குடும்பத்தில் அனைவரும் தமக்குக் கட்டுப்பட வேண்டும், ஏராளமான பணத்தை வாரி வீசி வாழவேண்டும், ஊரில் பெரிய மனிதன் எனப் பெயர் பெறவேண்டும், இலக்கியத்தில் இணையற்ற உயர்வு பெறவேண்டும், ஒரு வருஷமாவது மந்திரி பதவி தேவை, எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லும் பொது அறிவு general knowledge



வேண்டும் என்றெல்லாம் மனம் நினைப்பதுண்டு. சிலருக்கு அவை பலிக்கும். நினைத்தது பலிக்காவிட்டால் வேறு பலிக்கும். பலருக்கு நினைவோடு வாழ்வு முடியும். அவர்களுள் நல்ல உள்ளம் கொண்டவர் சிலர், எனக்கு அந்த ஆசையெல்லாம் கிடையாது,

**நல்லவன் எனப் பெயர் வாங்க வேண்டும்**

என்பதே என் குறிக்கோள் என்பவருண்டு. உடன் உள்ளவர் அனைவரும் இதைப் போற்றுவார்கள். 'நல்ல மனிதன்', 'நம்மால் இதுபோல் இருக்க முடியவில்லையே' என்று கருதுவார்கள். இது நல்லது என்பதில் ஐயமில்லை. ஆனால் இங்கு ஆரம்பித்தால், அது நல்லதில் முடியாது. நல்லது என்பதின் பெயரால் நமக்குத் தவறு ஏற்படும். ஆன்மீகத்தில் அது பெரிய தவறாகும். ஆன்மாவுக்கு ஊறு செய்யும். தவறு செய்பவன் தயங்குவான், பயப்படுவான், தவறு என்று தெரிவதால் தன்னைத் திருத்த வேண்டும் என்ற எண்ணம் எப்பொழுதும் இருக்கும். நல்லவன் என்று பெயர் எடுக்கவேண்டும் என்று நினைப்பது நல்ல எண்ணம் என்பதால் அதனுள் உள்ள குறை தெரியாது. குறை தெரியாததால், குறை வளர்ந்தபடியிருக்கும்.

இயல்பாக நல்லவனாக இருக்கும்பொழுது நம்மைப் பற்றி நினைப்பதில்லை, நல்லதைப் பற்றியும் நினைப்பதில்லை. ஏனெனில் அது இயல்பாக உள்ளது. நல்லவன் என்று பெயர் எடுக்கவேண்டும் எனில் நாம் இடைவிடாது அதையே நினைக்கின்றோம். அந்நினைவு நம்மைப் பற்றியே நாம் நினைத்துக் கொண்டிருப்பதாக முடியும். நம்மைப் பற்றியே நாம் நினைப்பது சுயநலத்தை வளர்க்கும். அதுவும் (மற்றவர்களைவிட) நல்லவன் எனப் பெயர் எடுக்கவேண்டும் என்றால் தன்னை உயர்வாகக் கருதும், அது அகந்தையை வளர்க்கும்.

மனிதன் உயிரோடு இல்லை என்றால் அவனை நல்லவன் என உலகம் பேசும். காலமானபின் ஒருவரைக் கெட்டவன் என உலகம் கூறுவதில்லை. உயிரோடுள்ளவரை நல்லவன் என ஒருவரைப் பேசினால் அது, "அவன் பணக்காரன், நல்லவன் என அவனைப் பேசாவிட்டால் உபத்திரவம் வரும்" என்பதே பொது விதி.

- ❈ **உலகம் வல்லவனை, அதுவும் எவன் வலிமை நிச்சயமாகப் பாதிக்குமோ அவனை, நல்லவன் என வாயார, மனமார, உளமாரப் புகழும்.**
- ❈ **இதைப் புகழ் என உலகம் எடுத்துக் கொள்ளும்.**
- ❈ **அனைத்துலகம் நாடுவது அவ்வலிமையையே.**
- ❈ **வலிமையை நாடும் மனம், தன்னையே ஏமாற்றிக்கொண்டு தான் நல்லவன் என்று பெயரெடுக்க முனைவதாக அறியும்.**
- ❈ **நல்லவனாக இருப்பது மேற்சொன்னதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.**
- ❈ **ஒன்றை நாடும் மனம், வேறொன்றை நாடுவதாகக் கொள்வது** illusion **மாயை எனப்படும்.**
- ❈ **அகந்தை தன்னை வலுப்படுத்தும் முறைகளில் இதுவும் ஒன்றாகும்.**

உலகில் சேவை செய்தவர் ஆயிரக்கணக்கானவர். பெரிய சேவை செய்தவர்கட்குப் பெரிய பரிசு கொடுத்ததும் உண்டு, எந்தப் பரிசும் கொடுக்காததும் உண்டு. கொடுத்த பரிசை பெரியவர்கள் மறுத்ததும் உண்டு. எந்தச் சேவையும் செய்யாமல் எவரோ செய்த சேவைக்கு ஏராளமான பரிசு பெறுவதும் உலக வழக்கு. மகாத்மா காந்திக்கு நோபல் பரிசு அளிக்காத உலகம், அவரைப் பின்பற்றிய மார்ட்டின் லூதர் கிங் என்பவருக்குக் கொடுத்தது. நேருவுக்கு நோபல் பரிசில்லை, ஸ்ரீ அரவிந்தரையும் உலகம் கண்டுகொள்ளவில்லை. ஆஸ்பத்திரி சேவை செய்ததை உலகம் கண்டுகொண்டது. ஆரோவில் நகரம் நிர்மாணித்ததைக் கண்டுகொள்ளவில்லை. ஐன்ஸ்டீனுக்கு 8 ஆண்டு பரிசு தர தயங்கிய உலகம், கொடுத்தபொழுது அவருடைய Theory of Relativityக்குக் கொடுக்கவில்லை.

பரிசுகள் சர்க்கார் தருவது. நல்லவன் என்ற பெயரை மக்கள் தருவார்கள். ஷேக்ஸ்பியரின் சிறப்பான 4 நாடகங்களும் tragedies வருத்தமான கதைகள். ஷேக்ஸ்பியர் மனித வாழ்வின் சிறப்பைப் படம் பிடித்துக் காட்டினார். ஆனால் அதை மனிதனின் தோல்விமூலமாகக் (tragedy) காட்ட முடிந்தது. அது 400



வருஷத்திற்குமுன். இன்றும் மனநிலை, உலகத்து மனநிலை, பெரும்பாலும் அதுபோன்றேயிருக்கிறது. மனிதனின் குணத்தை comedy நல்ல முடிவுமூலமாகப் படம் பிடிக்கும் எழுத்தோவியம் இதுவரை எழவில்லை. நல்ல பெயர் எடுக்க முனைவது பழைய உலகத்திற்குரியது, நல்லவனாக இருப்பது அன்னை வாழ்வுக்குரியது.

✪ ✪ ✪

**752) நிகழ்கால நினைவு சந்தோஷத்தை அளிக்கும். கடந்த காலத்தையோ எதிர்காலத்தையோ நினைப்பது ஏமாற்றம் தரும்.**

**ஏமாற்றமெல்லாம் சந்தோஷத்தை உற்பத்தி செய்பவை. கட்டுப்பாட்டிற்குரிய கல்லூரிப் படிப்பு பட்டத்தில் முடியும். ஆஸ்பத்திரி வாழ்வு உடல்நலத்தைத் தரும். சிறந்த எதிர்காலத்திற்காக அதைப் பொறுத்துக்கொள்ளலாம். அதற்கு அடுத்த நிலையுண்டு. படிப்பில் ஊன்றி நிலைத்து அளவுகடந்த சந்தோஷத்தைக் காணலாம். ஆப்பரேஷனுக்குப்பின் படும் வேதனையில் அதே சந்தோஷத்தைக் காணமுடியாது. எனினும் அங்கும் அது உள்ளது. துரோகத்தால் வதையும் மனிதன், துரோகியின் கண்ணோட்டத்தில் பிரச்சினையை அறிய முயன்றால், துரோகத்திலும், துரோக மனப்பான்மையிலும் அதே சந்தோஷத்தைக் காணலாம்.**

***துரோகத்தின் தூய்மை.***

அளவு கடந்து சந்தோஷமாகத் துள்ளி ஓடும் குழந்தை கடந்ததையோ, எதிர்காலத்தையோ நினைப்பதில்லை. வயது வந்தபின் அதுபோன்ற சந்தோஷம் ஒருவர் வாழ்வில் ஏற்பட்டு அவர் தன்னை மறந்திருந்தால், "இவருக்குத் தலைகால் புரியவில்லை. எதிர்காலத்தை நினைத்துப் பார்க்க முடியவில்லை" என்பார்கள். எதிர்காலத்தை

நினைத்தால் சந்தோஷம் போய்விடும். அப்படி நினைக்காததால்தான் சந்தோஷம் எழுகிறது. அதுவே சூட்சுமம்.

எதிர்காலத்தை மறந்தால் சந்தோஷம் எழும். ஆப்பரேஷனுக்குப்பின் வேதனைப்படுபவர் ஏன் அது தனக்கு வந்தது என்று அறியமுயன்றால், எந்த தன் குணம் இந்த வேதனைக்கு அடிப்படை எனப் புரிந்தால், வேதனை 98% குறையும். கான்சர் பேராசையுள்ளவர்க்கு வருகிறது என்கிறார் அன்னை. பேராசைக்காரர் அதை அறிவதில்லை, ஏற்றுக்கொள்வதில்லை. ஏற்றுக்கொண்டால் கான்சரே குணமாகும். மூலம், பௌத்திரம் வந்தவர்கள் எரிச்சலாகப் பேசுவார்கள். அது வியாதியால் வந்தது. உண்மையில் எரிச்சல் குணம் உள்ளவர்க்குப் பௌத்திரம் வரும். எரிச்சலை விட்டொழிக்க முன்வந்தால் பௌத்திரம் குணமாகும்.

கடந்தது நினைவுக்குரியது. எதிர்காலம் கற்பனைக்குரியது. இரண்டும் மனத்தில் எழுபவை. நிகழ்காலம் ஆன்மாவுக்குரியது. அதிலும் மனம் கலக்கும். கடந்ததிலிருந்து மனத்தை விலக்குவது கடினம். நிகழ்காலத்தில் மனத்தைச் சேர்ப்பது கடினம். ஆன்மாவுக்குரியது என்பதால் அனந்தனுக்குரியது. ஆனந்தம் என்பதற்கு அனந்தம் எனப் பெயர்.

கட்டுப்பாடு சந்தோஷத்தைக் குறைக்கும். கட்டுப்பாடு அதிகமானால் வலி ஏற்படும். அதையே கொடுமை என்கிறோம். கட்டுப்பாட்டிற்கு எதிரானது சுதந்திரம். சுதந்திரம் இருந்தால் சந்தோஷம் எழும். முழுச் சுதந்திரமிருந்தால் கட்டுப்பாடு வரமுடியாது. கட்டுப்பாடற்ற முழுச் சுதந்திரம், ஆனந்தத்தைத் தரும். அதனால் அதை அனந்தம் (சுதந்திரம்) என்றார். நிகழ்காலம் ஆன்மாவுக்கும், ஆனந்தத்திற்கும், அனந்தனுக்கும் உரியது என்பதால் அது சந்தோஷத்தைக் கொடுக்கும்.

உலக வாழ்வை மனிதன் அது உள்ளதைப்போல் ஏற்றுக்கொண்டுள்ளான். அது நல்லதும், கெட்டதும் கலந்தது. நம்



விதிப்படி வருவதை ஏற்று அனுபவிக்க மனிதன் முடிவு செய்துள்ளான். வாழ்வில் சந்தோஷம் மட்டும் இருக்கமுடியும் என்பதை மனிதன் இன்று நம்பும் மனநிலையிலில்லை.

**ஸ்ரீ அரவிந்தம், "மனிதன் தன் மனத்தால் இதை நம்பினால் அது உலகில் நடக்கும்" என்கிறது.**

இதன் தத்துவம் என்ன? அதற்குரிய விளக்கம் என்ன? கடந்த காலக் கஷ்டங்கள் என்னாவது? எதிர்கால நிலையற்ற பயங்கரம் எப்படி நம்மைவிட்டு வைக்கும்? ஏமாற்றம், வலி, துரோகம் உள்ளவரை மனம் எப்படி ஸ்ரீ அரவிந்தம் கூறுவதை ஏற்கும்?

- ❈ *ஏமாற்றம், வலி, துரோகம் உள்ளவரை எப்படி மனம் நம்பும்? என்பதை மாற்றி,*
- ❈ *மனம் நம்பினால் ஏமாற்றம், வலி, துரோகம் மறையும் என ஸ்ரீ அரவிந்தம் கூறுகிறது.*

**அதற்குரிய விளக்கம் :**

காரியத்தைச் சாதிக்கக் கட்டுப்பாடு வேண்டும். கட்டுப்பாட்டுடன் படித்தால் படிப்பு பட்டம் பெற்றுத் தரும், சந்தோஷம் எழும். பட்டத்தில் படிப்பை முடிக்காமல் அறிவை நாடினால் அபரிமிதமான சந்தோஷம் எழும். இதே சட்டமே வலிக்கும், துரோகத்திற்கும் எனினும், லீலை என்ற கருத்தையும், அறியாமை ஏற்பட்டதின் தத்துவ விளக்கமும் தெரியும்வரை அவை விளங்கா. சுருக்கமாகக் கூறலாம். ஆனந்தமே வலியாக மாறியதால் வலியை மாற்றும் இரஸவாதம் தெரிந்தால் ஆனந்தம் வரும். நட்பு இனிமை தரும். துரோகம் கொடுமையானது. இறைவனிடம் உள்ள நட்பை இனிமையாக்குவது நம் கடமை. அதனின்று வழுவும்பொழுது இறைவனின் கருவிகள் இணைந்து வந்து நம்மை இறைவனை நோக்கித் திருப்பும் பாதை நமக்குத் துரோகமாகத் தெரிகிறது. அதன் விவரம் தெரிந்தவுடன் துரோகம்

என்பது உயர்ந்த நட்பு என விளங்கும். அதை விளங்க வைக்கும் கருவி துரோகி.

இதுவரை பட்ட வலியும், நஷ்டமும் அறிவுக்கு ஆனந்தமாகவும், இனிமையாகவும் விளங்கியபின் வாழ்வு தானே சந்தோஷமாக மாறும்.

☆ ☆ ☆

**753) இறைவனுக்குப் பிரச்சினையில்லை. சிருஷ்டி மலர்வதை அனுபவிக்கும் இறைவன், அதைத் துரிதப்படுத்தி அனுபவிக்கின்றான்.**

***மலர்ச்சியின் ஆனந்தம்.***

நாம் இறைவனை நினைக்கும்பொழுது மனித உருவத்தில் அவனைக் கருதுகிறோம். நமக்குப் பெயரிருப்பதைப்போல் அவனுக்கும் பெயரிடுகிறோம். நமக்குள்ள உணர்ச்சி, அறிவு போன்றவை அவனுக்கும் இருப்பதாக நாம் நினைக்கிறோம். ஆஸ்பத்திரியில் சேர்ந்திருப்பவருக்கு, அங்கு வருபவர்களைப் பார்த்தால் அவர்களும் நோயாளிகள் என நினைப்பது சகஜம். நோயாளிகள் தவிர ஆஸ்பத்திரி சிப்பந்திகள், நோயாளிகளுடன் வருபவர்கள், டாக்டர்கள், பழம், ரொட்டி சப்ளை செய்பவர்களும் வருவது நோயாளிக்குத் தோன்றுவதில்லை. தன்னைப்போல் பிறரை நினைக்கும் பழக்கம் ஆண்டவனை நினைக்கும்பொழுது அவருக்கு என்ன பிரச்சினை, தன் பிரச்சினையை ஆண்டவன் எப்படித் தீர்க்கின்றார் என நினைப்பது இயல்பு. அவருக்குப் பிரச்சினைகளில்லை எனத் தோன்றுவது சிரமம். தகப்பனார் சம்பளத்திற்குள்ள உத்தியோகத்தை ராஜினாமா செய்தபின் சொந்தத் தொழில் ஆரம்பித்தார். மகன் அவரை இப்பொழுது யார் உங்களுக்கு சம்பளம் தருகிறார்கள் என்று கேட்டான். இப்பொழுது தகப்பனார் பிறருக்குச் சம்பளம் கொடுக்கிறார், அவருக்கு யாரும் சம்பளம் தருவதில்லை. அவர் பெறுவது வருமானம் என சிறுவனுக்குப் புரிவதில்லை.



வேலையிலுள்ளவரை ஆபீசுக்குப் போகிறோம். வீட்டு வேலையிருந்தால் லீவு போடுகிறோம். ரிடையர் ஆனபின் வாழ்நாள் முழுவதும் லீவுதான். வேலைக்கே போகாத செல்வருக்கு வாழ்வே லீவுதான். மனிதன் காலத்திற்குட்பட்டவன். இறைவன் காலத்தைக் கடந்தவன். மனிதனுக்குக் காலம் முக்கியமானதால் அவசரம் உண்டு. இறைவனுக்கு அவசரமில்லை. இயற்கை (Nature) காலத்தால் ஏற்பட்டது. என்றாலும் இறைவன் காலத்தைக் கடந்தவன் என்பதுபோல், இயற்கையும் காலத்தால் மனிதனைப்போல் கட்டுப்படாதது. இறைவன் காலத்தைவிட உயர்ந்தவன். இயற்கை காலத்தினின்றும் தாழ்ந்தது. இருவரும் காலத்தால் பாதிக்கப்படாதவர்கள். இயற்கைக்கும் அவசரமில்லை. தான் செய்யும் காரியங்களை நிதானமாக, அனுபவித்து, ஆனந்தம் வெளிப்படும் வகையில் பொறுமையாகச் செய்வது இயற்கையின் பழக்கம். (She has eternity before her) காலம் கடந்த நிலை அவளுடையது என்கிறார் அன்னை.

இறைவன் இருக்கிறான். இப்படித் தானிருக்க வேண்டும் என்ற நியதி அவனுக்கில்லை. ஒளியாகவுமிருக்கலாம், இருளாகவுமிருக்கலாம், அசைவாகவுமிருக்கலாம், அசைவற்றும் இருக்கலாம். வேறு எந்த வகையாக இருக்க அவன் பிரியப்பட்டாலும் அப்படியிருக்க முடியும். லீலை என்பதை இறைவன் மேற்கொண்டுள்ளான். சும்மா இருந்து சுகம் பெறும் நிலையை மாற்றி சிருஷ்டியை ஏற்படுத்தி, பரிணாமம் மூலம் புதுவகையான ஆனந்தத்தை அனுபவிக்க அவன் முடிவு செய்ததால், சிருஷ்டியுள்ளது.

***அந்த சிருஷ்டி மலர்வதே அவன் நாடும் ஆனந்தம்.***

***மலர்ச்சி பரவியும் நிறைந்துமிருப்பது பேரானந்தம்.***

***பிரச்சினை மனத்திற்கும் மனிதனுக்கும் உரியது.***

***மலர்ச்சியும் ஆனந்தமுமே இறைவனுக்குரியது.***

***சிருஷ்டி அவனுக்குத் தருவது இயற்கையின் மலர்ச்சி.***

***பூரண யோகம் நாடுவது ஆன்மீக மலர்ச்சி.***

***ஆன்மா, ஆண்டவனாகி, ஏற்படும் மலர்ச்சி அவன் நாடுவது.***

***ஆண்டவனாகிய ஆன்மா ஸ்ரீ அரவிந்தர்.***

***அன்னை அப்பாதையில் அவரையும் கடந்து நின்றார்.***

***நம்மையும் அப்பாதைக்கு அழைப்பது பூரண யோகம்.***

ஏன் இந்த சிருஷ்டி? என்ற கேள்வியை நாம் கேட்க முடியாது என்ற பரம்பரைக் கருத்தை ஸ்ரீ அரவிந்தர்,

> "எல்லாம் வல்லவன் இறைவன். எல்லாவற்றையும் தன்னுள் பெற்றவன். எந்தத் தேவையும் இல்லாதவன், எவராலும் வற்புறுத்த முடியாதவன், சிருஷ்டியை மேற்கொண்டான் எனில் அதற்குக் காரணம் என்று நாம் கூறமுடியுமா?" என்ற கேள்வியை எழுப்புகிறார். எழுப்பியவர் அவரே விடையளிக்கிறார். அவ்விடை,

> ***"ஆனந்தம் பெற இறைவன் சிருஷ்டியை மேற்கொண்டான் என்பதே பொருத்தமான பதில்"***

என்ற சொற்களால் கூறுகிறார்.

மனிதன் இறைவனாக வேண்டும் என்பது ஸ்ரீ அரவிந்தம். மனிதனாக உள்ளவரை அவனுக்குப் பிரச்சினையுண்டு, இறைவனுக்குப் பிரச்சினையில்லை. நாம் ஆனந்தத்தைத் தேடுகிறோம், சில சமயம் கிடைக்கிறது, பல சமயம் வலி கிடைக்கிறது. இறைவன் நாடும் ஆனந்தம் தவறாது கிடைக்கிறது. இதுவே நாம் இறைவனைப் பற்றியும், சிருஷ்டியைப் பற்றியும் அறிந்தது. இப்பொழுது ஸ்ரீ அரவிந்தர்,

> ***பரிணாமத்தைத் துரிதப்படுத்தி சத்தியஜீவன் பிறக்கவேண்டும்***

என்கிறார்.



பிரச்சினையில்லாத இறைவன், தவறாது தான் தேடும் ஆனந்தத்தைப் பெறுபவன் ஏன் பரிணாமத்தைத் துரிதப்படுத்தி சத்திய ஜீவன் பிறக்கவேண்டும் என்கிறான். பரிணாமம்தான் அவன் தேடும் இன்பமாயிற்றே, ஏன் அதைத் துரிதப்படுத்தவேண்டும் என்பது கேள்வி. இறைவன் தேடுவது ஆனந்தம், சச்சிதானந்தத்தில் ஆனந்தம் (Bliss) எனப்படும். அதைவிட உயர்ந்த ஆனந்தம் சிருஷ்டியில் இறைவன் வெளிப்படும்பொழுது எழும் ஆனந்தம் (Delight).

- ***ஆனந்தத்திற்கு இவ்விரு நிலைகள்தானுண்டா?***
- ***ஆனந்தம் அதிகரிக்க அளவில்லை, ஏனெனில் அது அனந்தம்.***

பரிணாமம் இன்று நடப்பதுபோல் நடந்தால் இறைவன் பெறும் ஆனந்தம் ஒன்று. அது துரிதப்படுத்தப்பட்டால், இறைவன் பெறும் ஆனந்தம் அதிகம்.

அன்னை தம் கடைசி நாட்களில் இறைவன் பெறும் ஆனந்தத்தைக் கண்டார். கண்டவர், "ஓகோ, இறைவன் இப்படித்தான் ஆனந்தத்தை அனுபவிக்கிறானா?" எனக் கூறினார். சத்தில் ஆரம்பித்து, ஜடத்தில் முடிந்து, மீண்டும் ஜடத்தில் ஆரம்பித்து சத் வரை சென்று, முடிவாக, பிரம்மத்துள் சிருஷ்டி கிரகிக்கப்படுவதில் இன்று நாம் - மனிதன் - உள்ள நிலை 10. மேலும் சிருஷ்டியில் 6 நிலைகள் உள்ளன.

- ***நிலை உயர்ந்தால் ஆனந்தத்தின் தரம் உயரும்.***
- ***அது இந்த சிருஷ்டிக்குரியது.***
- ***பிரம்மத்திற்கு அதுவே முடிவன்று.***
- ***பிரம்மம் எதையும் செய்யும், எந்த நிலைக்கும் உயர்த்தும்.***

சிருஷ்டி மலர்வது, இறைவனின் மலர்ச்சி. அம்மலர்ச்சியின் தரத்தைப் பொருத்தது இறைவனின் ஆனந்தம்.

☆ ☆ ☆

**754) புரியாதவரை மனிதனுக்குப் பிரச்சினையுண்டு. புரிந்தால் பிரச்சினை இல்லை. புரியாதவரை பிரச்சினையாக இருந்தது, புரிந்தவுடன் பிரச்சினையாக இருப்பதில்லை. பார்வை மாறினால் பிரச்சினை கரைகிறது.**

*மாறிய பார்வை, கரையும் பிரச்சினை.*

அனுபவமில்லாத விஷயம் மலைபோலப் பாரமாக இருக்கும். தவறாகப் புரிந்துகொண்டவை பயத்தை எழுப்பும். விளங்காதவை சிக்கலாகப்படும். முதல்முறை கோர்ட் சம்மன் பெற்றவர், ஆடிப்போவார். திவாலானதுபோல் நடுங்குவார். கோர்ட் விவகாரம் தெரிந்தவர்கட்கு அந்தப் பயம் இருக்காது. சம்மன் வந்தால் என்ன செய்யவேண்டும் என்று தெரியும். அது பிரச்சினையாகாது.

சட்டத்திலும், நடைமுறையிலும், வாழ்க்கையின் வழிகளிலும் நமக்குப் புரியாதவை ஏராளம். அது நமக்குப் பிரச்சினையாகிவிடும். பிரியமான கணவன், அதிகமாகத் தன்னை விரும்புவதைத் தவிர்க்க மனைவி எரிந்து விழுந்தாள். கொஞ்ச நாளில் கணவன் மனைவியைப் புரிந்துகொண்டான். நெருக்கத்தைக் குறைத்துக்கொண்டான். தூரம் ஏற்பட்டது. மனதால் விலகியவர், நடைமுறையில் விலகும்வரை தூரம் ஏற்பட்டு அதுவே வாழ்க்கை முழுவதும் அமைந்தது. தான் கணவனை விலக்கியதை அவள் அறியமாட்டாள்.

இதுபோன்ற மற்றொரு மனைவியைக் கணவன் பொறுத்துக் கொள்ளாமல் அவள் வீட்டிற்கு அனுப்பிவிட்டான். தான் வாழ்ந்த நாட்களை நினைத்து அவன்மீது மனதால் பிரியப்பட்டு அழுதாள். அவனே வந்து அழைத்துக்கொண்டு போனான். ஒருத்திக்குப் பிரச்சினை தீரவில்லை, அடுத்தவளுக்குத் தீர்ந்தது. ஆனால் இருவருக்கும் புரியவில்லை.

மனதாலும், குணத்தாலும் விலக்கினால் வாழ்வில் விலகிவிடுவோம் என்பது புரியவில்லை. புரிந்தால் அதனால் ஏற்பட்ட பிரச்சினை விலகும்.



தம்பி தனக்குப் போட்டியாக நடப்பதை அண்ணனால் பொறுக்க முடியவில்லை. நாளுக்கு நாள் அவன் செய்வனவெல்லாம், சொல்லும் சொற்கள் எல்லாம் காதில் நாராசமாக விழுந்தன. இனி இந்தத் தம்பி முகத்தில் விழிக்கக் கூடாது என்று முடிவு செய்துவிட்டான். தம்பி அண்ணனிடம் வந்து தன் தாம்பத்ய வாழ்க்கையை அந்தரங்கமாகப் பேசினான். சொல்வனவற்றை எல்லாம் கேட்டால் இப்படியும் ஒருத்தி இருப்பாளா, பேசுவாளா என நினைக்க முடியவில்லை. தம்பியின்மீது அளவுகடந்த பரிதாபம் ஏற்பட்டது. போட்டியால் அவன் எழுப்பிய கோபமும் சற்று குறைந்தது. வாழ்க்கை இப்படியிருந்தால் தம்பி வெளியில் எப்படி வேலை செய்வான் என்று யோசனை செய்யும்பொழுது திடீரென தம்பி தன்னுடன் அடாவடியாகப் போட்டி போடுவது தாம்பத்ய கோளாறில் எனப் புரிந்தது. புரிந்தவுடன் மனம் மாறியது. தானே முன்வந்து போட்டியை விட்டு விலகினான்.

தகப்பனார் அக்காவுக்குத்தான் செய்வார், எனக்குச் செய்யமாட்டார் என்று நினைக்கும் தம்பிக்கு, தகப்பனாரின் செயல் தன் எண்ணத்தால் உற்பத்தியானதாகப் புரிவதில்லை. தான் அதுபோல் நினைத்ததால்தான், தகப்பனார் அப்படி நடக்கின்றார் என்று அவனால் நினைக்கவும் முடிவதில்லை. ஆனால் அதுவே உண்மை. உண்மையை மனம் ஏற்றால் செயல் மாறிவிடும், தகப்பனார் மாறிவிடுவார்.

ஜடம் சச்சிதானந்தமாவது திருவுருமாற்றம் என்று எழுதிய பகவான், அத்திருவுருமாற்றத்தை நம் ஜீவனில் எப்படிப் பூர்த்தி செய்வது என இரு பெரிய நூல்கள் எழுதினார். அவற்றின் சுருக்கமாக,

**ஜடத்தைப் பற்றிய நம் எண்ணம் மாறினால்,**

**ஜடம் சச்சிதானந்தமாக மாறும்.**

**பார்வை மாறினால் உலகம் மாறும்**

என்று எழுதினார்.

பிரச்சினை என்பதற்கு விபரம் தெரியாதபொழுது ஏற்படும் குழப்பம் எனவும் கூறலாம். விபரம் தெரியாதவரை உடல் நடுங்கும், தெரிந்தால் பயம் போய்விடும் என்பது ஒரு மனநிலை. விபரம் தெரிந்த இடத்திலும் நம்பிக்கை சரியில்லாததால் பயமும் குழப்பமும் ஏற்படும். இவற்றிற்கெல்லாம் நம் வாழ்வில் பல உதாரணங்கள் உண்டு.

☆ ☆ ☆

**755) மாறிய பார்வை மனத்தின் பிரச்சினைகளைக் கரைக்கிறது. உணர்வில் மாறிய நோக்கம் உள்ளத்தைப் பூரிக்கச் செய்யும். உடல் உணர்வு physical sensitivities மாறினால் உள்ளும் புறமும் திருவுருமாறும்.**

*உடல் திருவுருமாறும் உள்ளுணர்வு.*

மாற்றம் சக்தி வாய்ந்தது. என்மீது நண்பர் வெறுப்பாக இருக்கிறார் என்பது, எனக்கு அவர்மீது வெறுப்பு என்று நாம் அறியவேண்டும். என் மனதிலுள்ள வெறுப்பே அவரிடமிருந்து பிரதிபலிக்கிறது, நான் மாறினால் அவர் மாறுவார் என்பது உண்மை. அதை சோதனை செய்து பலன் கண்டு பிரமித்தவர் அநேகர்.

மனத்தின் அபிப்பிராயத்தைவிட உணர்வுக்கு சக்தியுண்டு. உணர்வு மாறினால் உலகமே மாறும். எவருக்குமே நல்லது செய்ய முடியாதவர் ஒருவர், தீங்கு செய்ய சந்தர்ப்பம் கிடைத்தால் தவறவிடமாட்டார். இவருக்குக் கீழ்பட்டு நடப்பவரிடம், ''உன் திட்டங்கள், கம்பனிகள் முன்னுக்கு வரக் கூடாதது அல்லவா?'' என்று நேரே கேட்கும் குணம் உள்ளவர். இவர்மூலம் எனக்கு நல்லது நடக்கவே முடியாது என்று எவரும் அறியும் உறவு. பக்தர் அந்நிலையிலும் அந்த உணர்வுக்கு இடம் தரவில்லை. கொஞ்சநஞ்சம் இருந்த தவறான உணர்வையும் நேர் எதிராக மாற்றி, ''அன்னை இவர்மூலமும் எனக்கு நல்லது செய்ய முடியும்'' என்று கருதிய அதே நேரம், அவர் வாழ்விலே பெற்ற பெரிய சொத்தைப் பெறும் வாய்ப்பை



அந்த 'நல்ல' மனிதர் முன்கை எடுத்து முடித்து வைத்தார். உணர்வு சக்தி வாய்ந்தது. அது மாறினால் எதுவும் மாறும்.

கணவனுடைய தவறான தொடர்பைப் பற்றி மனைவிக்குச் செய்தி வருகிறது. அவள் நம்புகிறாள். நம்பியதே உண்மையாகிறது. மனைவியைப் பற்றி தாறுமாறான செய்தி கணவனுக்கு வருகிறது. க்ஷணத்தில் கொலைக்குத் தயாராகிறது. மகன் போதை மருந்தில் மூழ்கிவிட்டான் என கல்லூரியிலிருந்து கடிதம் வருகிறது. இனி எனக்கு உயிர் போனால் நல்லது என பெற்றோர் நினைக்கிறார்கள். உயிரும் போகிறது. இதுபோன்றவை கடுமையான, கொடுமையான நிகழ்ச்சிகள். மனிதனுக்கு வரக்கூடாது. வந்துவிட்டால் அத்துடன் அனைத்தும் முடிந்துபோகும்.

இத்தனையும் உண்மையானாலும், அன்னையிடம் வேறொரு உண்மையும் உண்டு. என் கணவரை எனக்குத் தெரியும். அவரைப் பற்றி எதையும் நான் நம்பமாட்டேன். அன்னையை மட்டுமே நான் நம்புகிறேன் என்ற நேரம் மனம் பேதலிப்பதற்குப் பதிலாக தெம்பாகத் துள்ளி எழும். வந்த சேதியைக் கவனித்தால் நடந்த விஷயத்தில் கணவனுடைய பெருமைப்படும் குணம் வெளிப்பட்டது தெரியும். நடந்த நிகழ்ச்சியானாலும் அதன் முடிவை நிர்ணயிப்பது செய்தியன்று, உள்ளுறை உணர்வு. உணர்வு சரியாக இருந்து மனம் அன்னையை நம்பினால், உயர்ந்த செய்தி மட்டுமே வரும். நடக்க இருந்த தவறும் தடம் மாறி நல்லதாக முடியும். இது உணர்வுக்குரிய திறன்.

உடலின் திறன் தலையாயது, மிகப் பெரியது. யோகப் பலனை அளிக்கவல்லது. உள்ளும் புறமும் திருவுருமாற்றம் தரவல்லது. அதனால் புற நிகழ்ச்சிகளை நிர்ணயிக்க முடியும், உலகின் போக்கை நிர்ணயிக்க முடியும்.

**எந்தச் சூழ்நிலையையும் மனமாற்றம் மாற்றும்.**

**எந்த நிகழ்ச்சியையும் உணர்வு மாறினால் மாற்ற முடியும்.**

**நடந்துபோன நிகழ்ச்சியும் மாறி நல்ல பலனைத் தரவேண்டுமானால் உணர்வின் மாற்றம் உடலின் ஆழத்தைத் தொடவேண்டும்.**

அண்ணனும் தம்பியும் உதவாத இடத்து அடி உதவும். தவறு செய்து அடி வாங்கியவனுக்கு மீண்டும் அதையே செய்யத் தோன்றும், ஆசையாகவுமிருக்கும். அந்நேரம் வாங்கிய உதை நினைவுக்கு வரும், உடல் நினைவுபடுத்தும், எல்லாம் அடங்கிவிடும்.

சிலபேர் துடுக்காகப் பேசுவார்கள், மறித்துப் பேசுவார்கள், மறுத்துப் பேசுவார்கள், அப்படிப் பேச சந்தோஷப்படுவார்கள். அதற்காகப் பெருமைப்படுவார்கள். இவர் அதிகாரியாக இருந்தால், கீழுள்ளவர்கள் கேட்டுக்கொள்வார்கள். "பல்லெல்லாம் கொட்டும்படி அறையலாம் போலிருக்கிறது" என்று நினைத்துக்கொள்வார்கள். ஒரு பெண்ணுக்கு இதுபோன்ற பழக்கம். டாக்டரைப் பார்க்கவேண்டும். முக்கிய விஷயம். ஊரில் பெரிய டாக்டரைப் பார்க்கவேண்டும். அவர் மருந்து கொடுப்பார், கேள்வி கேட்க அனுமதிக்கமாட்டார், கேட்டால் கோபப்படுவார். தனக்கு என்ன வியாதி என அறிய ஆவல். டாக்டருக்கு வேண்டியவர் ஒருவர்மூலமாக பெண் டாக்டரிடம் போனாள். தன் வழக்கப்படி துடுக்காகப் பேசினாள். டாக்டர் பதில் சொல்லவில்லை. பெண்ணை அனுப்பிவிட்டு, நண்பரை நோக்கி, "இனி இந்தப் பெண்ணை என்னிடம் அழைத்து வராதே" என்றார். இவள் புத்திமதியால் மாறமாட்டாள். குறிப்பாக இந்தப் பெண் தகப்பனாரிடமும், தாயாரிடமும், கணவனிடமும் அடி வாங்குபவள். அண்ணன் தம்பி உதவாதபொழுது உதவும் அடியும் இவளிடம் பலன் தரவில்லை. இவர்களை, ''இவரெல்லாம் திருந்தமாட்டார்'' என்று விட்டுவிடுகிறோம். ஏன் எனில் இவர் பழக்கம், அறிவையும் உணர்வையும் கடந்து உடலில் ஊறியுள்ளது. உடல் துடுக்காகப் பேசுவதை மாற்றிக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்டவர்க்கு தங்கள் சொல்லுக்கும், அதன் பலனுக்கும் உள்ள தொடர்பு தெரிவதில்லை.



ஒரு சமயம் உடலில் ஆப்பரேஷனுக்குப் போனார். பெரிய ஆப்பரேஷனில்லை, வயது குறைவாக இருப்பதால் சிக்கலில்லை. டாக்டர் ஆப்பரேஷன் செய்யவேண்டுமென்றார். இவர் வீட்டில் சம்மதித்தனர். தகப்பனார் அன்னை அன்பர், அதிக அனுபவமுள்ளவர். பெண் யாரையும் மறுத்துப் பேசுவாள். தகப்பனாரை மறுத்துப் பேசுவதில் அலாதிப் பிரியம். அவர் கண்டிப்பதில்லை. இப்பெண்மீது கெட்ட எண்ணமுள்ள ஒரு வயதான பெண்மணி இவரைப் பார்க்க வந்தார். தகப்பனார் வழியிலேயே பார்த்து அவருக்குச் சமாதானம் சொல்லியனுப்பிவிட்டார். தகப்பனார் போனபின் அப்பெண் மீண்டும் வந்தார். ஆப்பரேஷனைவிட தகப்பனார் பேச்சைத் தட்டவேண்டும் என்ற ஆர்வம் பெண்ணுக்குண்டு. வழியில் திரும்ப தகப்பனார் அனுப்பினார் எனக் கேள்விப்பட்டு வந்த கெட்ட எண்ணமுள்ளவரை அன்பாக உபசரித்தார்*!* அதாவது தன் துடுக்கான பழக்கத்தால், கெட்ட எண்ணத்தின் முழு வேகத்தை வரவேற்றார்*!!* ஆப்பரேஷன் சாதாரணமாக முடிந்தது. பட்ட அவதி பெரியது. வலியைக் குறைக்கும் மருந்தை இவருக்குக் கொடுக்க முடியவில்லை. அவதி என்றால் படாதபாடு, பாடாவதிபட்டார். அதன்பிறகு துடுக்குப் பேச்சு பாதி குறைந்தது. மீண்டும் ஆப்பரேஷன், மீண்டும் அவதி. துடுக்கு மேலும் குறைந்தது. அவதிப்பட்ட உடல் ஆழ்மனத்தை மாற்றும். அதுவே உடல் திருவுருமாறும் உள்ளுணர்வு.

*தொடரும்...*

☆ ☆ ☆

**ஜீவிய மணி**

வதந்தி மனிதன் கண்ட பெரிய தந்தி.

## லைப் டிவைன்

கர்மயோகி

## XI. Delight of Existence : The Problem

The primary origin of ethics is this recoil. *Page No. 96*
But this recoil itself is not ethics. *Para No. 11*
The fear of the deer for the tiger is a vital recoil.
The rage of the strong creature against attack also is a vital recoil.
It is a recoil of individual delight of existence.
It is a recoil from that which threatens it.
Mentality progresses.
The recoil refines itself into repugnance, dislike and disapproval.
We disapprove of what threatens and hurts us.
We approve of what flatters and satisfies us.
They refine into the conception of good and evil to oneself.
It is considered good to others, other communities.
Finally it is approved of as general good.
It is also considered a general disapproval of evil.
There is a fundamental nature in all this.
It remains the same throughout.
Man desires self-expression.



## 11. ஆனந்தம் - கேள்வி

இப்படி ஒதுங்குவதே தர்மத்தின் முதல் ஆரம்பம்.
ஆரம்பம் இதுவானாலும், இதுவே தர்மமாகாது.
புலியைக் கண்டு பயப்படும் மானின் உணர்ச்சி பின்னோக்கி ஓடுகிறது.
வலிய மிருகம் எதிரியைக் கண்டு கோபாவேசம் கொள்வதும் அதுவே.

வாழ்வின் ஆனந்தம் அதன் வழி சுருங்குகிறது.
ஆபத்திலிருந்து சுருங்கி விலகும் பாணி அது.
மனம் வளர்கிறது.
சுருக்கம் மறுப்பாகவும், வெறுப்பாகவும், பொறுக்க முடியாததாகவும் ஆகிறது.
ஆபத்தை நாம் மறுக்கிறோம், அடிபடுவதை விலக்குகிறோம்.
சௌகரியமானதையும், சந்தோஷமானதையும் ஏற்கிறோம்.
அது நல்லது, கெட்டது என நம்முள் உருவம் பெறுகிறது.
அதுவே பிறருக்கும், உலகுக்கும் நல்லது என நினைக்கிறோம்.
முடிவாக அதை நல்லது எனத் தீர்மானம் செய்கிறோம்.
தீமையை மறுப்பதாக நாம் அறிகிறோம்.
இவற்றிற்கெல்லாம் அடிப்படையானது ஒன்றுண்டு.
ஆரம்பத்திலிருந்து முடிவுவரை அது மாறுவதில்லை.
மனிதன் தன்னை வெளிப்படுத்த விரும்புகிறான்.

He desires self-development.
Thus the conscious-force of existence plays in him.
It is its progress.
That is man's fundamental delight.
Something hurts that self-expression.
It hurts the self-development too.
It can stay the self-satisfaction of his progress.
All such things are evil for man.
Whatever helps these, is good.
They may help, confirm, raise, aggrandise, ennoble.

What changes is his conception of good.
His conception of self-development may change.
It may become higher and wider.
It may exceed the limits of his personality.
It may embrace others.
Maybe it will embrace all in its scope.

We can state it otherwise. *Page No. 97*
Ethics is not the goal. *Para No. 12*
Nor is it what is there from the beginning to the end.
It is a stage in evolution.
Sachchidananda tries to express itself.
It does so in the animal, in the man and even beyond man.
Sachchidananda is common to all the three stages.
To start with, this urge is unethical.



தான் வளரப் பிரியப்படுகிறான்.
ஆத்ம சக்தி அவனுள் இங்ஙனம் செயல்படுகிறது.
இது அதன் வளர்ச்சி.
இதுவே மனிதனுக்கு அடிப்படை ஆனந்தம்.
அவ்வானந்தத்திற்கு ஊறு செய்வதுண்டு.
அது வளர்ச்சியையும் தடை செய்யும்.
மனிதனுடைய வளரும் திருப்தியைத் தடை செய்ய வல்லது அது.
அவையெல்லாம் தீமைகள் என்று மனிதன் கருதுகிறான்.
இவற்றிற்குத் துணை செய்வது நல்லது.
உதவி செய்வது, உறுதிப்படுத்துவது, உயர்த்துவது, வலுப்படுத்துவது, உன்னதம் தருபவை நல்லவை.
மனிதன் தன்னைப் பற்றி அறிவது மாறும்.
தான் எப்படி வளர்வது என்பது மாறும்.
மாற்றம் மேலும் மேலும் உயரும்.
வளர்ச்சி அவன் சுபாவத்தைக் கடக்கும்.
பிறரையும் அது தழுவும்.
உலகை முழுவதும் அது தழுவலாம்.

இதை வேறு வகையாகக் கூறலாம்.
தர்மம் இலட்சியமில்லை.
தர்மம் ஆரம்பம் முதல் முடிவுவரை வருவதில்லை.
தர்மம் பரிணாமத்தில் ஒரு பகுதிக்குரியது.
சச்சிதானந்தம் தன்னை வெளிப்படுத்த முயல்கிறது.
அது விலங்கிலும், மனிதனிலும், அவனைக் கடந்தும் வெளிப்படும்.
மூன்று நிலைகட்கும் பொதுவானது சச்சிதானந்தம்.
ஆரம்பத்தில் உள்ளது தர்மம் சம்பந்தப்படாதது.

**It is infra ethical in the animal.**
**In the intelligent animal, it is even anti-ethical.**
**Anti-ethical permits us to hurt others.**
**We do so by doing to others what we disapprove of.**
**Thus, man is half-ethical.**
**Below it is infra-ethical.**
**Above it is supra-ethical.**
**Above there is no need of ethics.**
**The lower is a harmony.**
**It is based on inconscience.**
**It is broken up by Life into individual discords.**
**The higher is a harmony and universality.**
**It is based on conscient oneness.**
**It is a oneness with all existences.**
**Ethical impulse is all important to humanity.**
**Humanity struggles out of the lower into the higher harmony.**
**For one who reaches the goal, ethics is unnecessary.**
**Maybe ethics is not possible above.**
**Ethics depends on good qualities.**
**It needs even the opposite evil.**
**Both will disappear above.**
**They will not be there for the final reconciliation.**

*Contd...*

☆ ☆ ☆



**மிருகத்தின் வாழ்வு தர்மத்திற்குக் கீழ்ப்பட்டது.**
**அறிவுள்ள மிருகம் அதர்மமானது.**
**அதர்மம் பிறருக்குத் தீங்கு செய்ய அனுமதிக்கும்.**
**நமக்கு நாம் செய்யாததை, நாம் பிறருக்குச் செய்வதால் தீங்கு எழும்.**
**எனவே மனிதனுக்கு முழு தர்மமில்லை.**
**கீழே தர்மத்திற்குக் கீழ்ப்பட்ட வாழ்வுளது.**
**மேலே தர்மம் தேவைப்படாத வாழ்வுளது.**
**மேலே தர்மத்திற்கு வேலையில்லை.**
**கீழுள்ள வாழ்வுக்குச் சுமுகம் உண்டு.**
**அது ஜடமான சுமுகம்.**
**வாழ்வு அதைப் பிரித்துப் பிணக்காக்குகிறது.**
**மேலேயுள்ள வாழ்வு சுமுகமானது, பிரபஞ்சத்திற்குரியது.**
**அது ஆன்மீக ஒருமையுடையது.**
**சகல ஜீவராசிகளுடனும் உள்ள ஒருமையது.**
**தர்மம் மனிதனுக்கு அவசியம்.**
**கீழிருந்து மேலேவர மனிதனுக்குத் தர்மம் அவசியம்.**
**இலட்சியத்தை அடைந்தவனுக்குத் தர்மம் தேவையில்லை.**
**மேலே தர்மம் இருக்க முடியாது.**
**தர்மத்திற்கு நல்ல குணங்கள் தேவை.**
**எதிரானவையும் தேவை.**
**மேலே இரண்டும் மறையும்.**
**முடிவான சுமுகத்தில் இரண்டும் இருக்கா.**

*தொடரும்...*

☆ ☆ ☆

# இம்மாதச் செய்தி

**அன்பரின் பிரச்சினை சிரபுஞ்சியில் தண்ணீர் பஞ்சம் போன்றது.**

**Conscious gift to unconsciousness.**

**It is a condition where foresight is not born yet.**

உலகில் அதிக மழை (454”) பெய்யும் சிரபுஞ்சியில் கோடையில் நீர்ப் பஞ்சம்.





**p.31 And danger brought a keen sweet tang of joy.**
**வெண்கலக்குரலினிமை ஆபத்துடன் வந்தது.**

- ❒ நிகழ்ச்சி நினைவை விட்டகலாத அனுபவம்.
- ❒ பெரிய மோதல்கள், குருக்ஷேத்திரக் குருவின் உபதேசங்கள்.
- ❒ வையகத்தின் குரலாக வந்த உபதேசங்கள்.
- ❒ தேனினும் இனிய தென்றலாக சூட்சுமம் உதட்டால் பேசியது.
- ❒ இதயம் எழுச்சியை ஏற்று மகிழ உதவும் குரல்.
- ❒ அழகசைய எழும் ஆசையில் இனிய ஆர்வங்கள்.
- ❒ ஆனந்த லோகம் அதிர எழுந்த புல்லரிப்பு.
- ❒ அற்புதம் ஆனந்தமாகும் லோகம்.
- ❒ அசரீரியாக ஒலிக்கும் அரிய சொற்கள்.
- ❒ ஏதும் அறியாத எழுச்சியின் பூரிப்பு.
- ❒ உலகத்தைக் கடந்த உறவு விழித்தெழுந்தது.
- ❒ சூட்சுமம் அனந்தமாகத் தொட்டிழுத்தது.
- ❒ கிரீச்சிட்ட கதவின் கீதம் போன்ற ஒலி.
- ❒ மின்னல் பார்வை துள்ளி மறைந்தது.
- ❒ வளரும் ஜீவனும் உடன் வளரும் திருஷ்டியும்.
- ❒ விரியும் வீச்சும், உயரும் பறவையும்.
- ❒ ஜடத்தின் சாம்ராஜ்ய எல்லையைக் கடந்தான்.
- ❒ வாழ்வின் எல்லையையும் கடந்து எண்ணத்தின் ஆட்சிக்குள் வந்தான்.
- ❒ உலகைக் கடந்த மோனப் பிரம்மம்.
- ❒ உருவம் பெற்ற உலகைக் கடந்து வந்தான்.

- ❒ **விரியும் வியாப்தியைக் கடந்து பார்வையைச் செலுத்தினான்.**
- ❒ **அடையாளம் அர்த்தமிழந்தது.**
- ❒ **புலனறியும் புலன்கள் மறைந்தன.**
- ❒ **உடலால் அசையும் இதயம் துடிப்பை மறந்தது.**
- ❒ **அழகின் அலைகள் இனி பார்வைக்கு விருந்தல்ல.**

நாம் நல்லதை நல்லதாக மட்டும் அறிகிறோம். கெட்டது ஒதுக்கப்பட வேண்டும் எனவும் உணர்வோம். இரண்டும் பிரிக்கப்பட முடியாதவை. இரண்டும் உயர்ந்தவையாகத் திருவுருமாற வேண்டியவை என்பது ஸ்ரீ அரவிந்தம். முதன்முறையாக ஆசிரமம் வரும்பொழுது பஸ்ஸில் இடமில்லை என்பது வருத்தமான சகுனம். சற்று நேரம் கழித்து காரில் வர முடிந்தது. 12 ஆண்டுகள் கழித்து வரப்போகும் காரை அன்றே சகுனம் உணர்த்தியது. **நடப்பதை மனம் கசங்காமல் ஏற்பது சரி.** இன்று ஹர்த்தால், பெரிய ஆர்ப்பாட்டம். எத்தனை கொலை விழும் எனத் தெரியாது என்ற நாளில் தரிசனத்தன்று அறியாத பேரமைதி, கனத்த மௌனம், கடைத்தெருவில் கண்டார் பக்தர். அது ஆண்டவன் இருப்பதைக் காட்டுகிறது. ஆபத்து என்பது ஆண்டவன் உலகைத் திருப்பி வைக்கும் நேரம். நமக்கு மனம் பதறும். பெரிய நல்லதுடன் வரும் தவறான செய்தியும், கெட்டதுடன் வரும் நல்லதும் வாழ்வின் ஆன்மீக உண்மையைக் காட்டுகின்றன.

**ஆபத்தும் இனிமையும் சேர்ந்து வருவது வாழ்வு.**

☆ ☆ ☆

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மனிதன் தன் நலம் மட்டும் கருதுவதால், அவனது உண்மை, பொய்யாகும்.

*சுயநலத்திற்கு மெய்யில்லை.*





## நவம்பர் 24th சித்தி தினம்

*(சென்னை - மாம்பலம் தியான மையத்தில் நவம்பர் 24, 2002 அன்று திருமதி விஜயா நாராயணன் நிகழ்த்திய உரை)*

ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தில் பகவான் ஸ்ரீ அரவிந்தர் பிறந்த தினமான Aug. 15 என்றும் தரிசன நாளாகும். 1920இல் அன்னை இரண்டாம் முறையாக புதுவை வந்தபின் இங்கேயே நிரந்தரமாகத் தங்கினார். 1926ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் தேதி பகவான் அடுத்த கட்டத்தில் ஒரு சித்தி பெற்றார். அன்று ஆசிரமம் இல்லை. பகவானுடனிருந்தவர் சுமார் 15 பேர். “அனைவரையும் அழைத்து வா” என பகவான் உத்தரவிட்டதன் பேரில் உத்தரவைப் பெற்ற சாதகருக்கு எவரை அழைப்பது, எவரை அழைக்காமல் விடுவது என்ற தெளிவில்லாததால் மீண்டும் யாரையெல்லாம் அழைக்கவேண்டும் என்று விளக்கம் கேட்டார். “ஒருவர் தவறாமல் அனைவரும்” என்று பதிலிறுத்தார் பகவான். அன்னையின் ஜன்ம தினமான Feb. 21 தரிசன நாள். பகவான் Nov. 24இல் சித்தி பெற்றதால் அன்றிலிருந்து Nov. 24 தரிசன நாளாயிற்று. Feb. 21க்குப் பின் சாதகர்கள் பகவானை தரிசிக்க ஆகஸ்ட் 15வரைக் காத்திருக்க வேண்டியிருப்பதால் கொஞ்ச நாள் கழித்து சாதகர்கள் விண்ணப்பத்தை ஏற்று, April 24ஐத் தரிசன நாளாக்க முடிவு செய்தனர். அன்னை முதல்முறை புதுவை வந்தது March 29. ஜப்பான் போய் போர் முடிந்தபின் இரண்டாம் முறையாக புதுவை வந்த நாள் April 24.

பகவான் ஸ்ரீ அரவிந்தர் யோகம் செய்த ரிஷியில்லை. அவதாரப் புருஷனுமில்லை. அவதாரம் என்று பகவானையோ, அன்னையையோ விவரிப்பது தவறாகாது. அச்சொல் அவர்களது ஆன்மீக முக்கியத்துவத்தை முழுமையாகக் குறிக்காது. வெளிநாட்டார் ஒருவர்

வந்து தமிழ்ப் பண்பைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கும்பொழுது கம்பனைப் பற்றிக் கூறுபவர், அறிஞர் என்று கூறினால் சரி என்றாலும், அது வெளிநாட்டவருக்கு கம்பனின் சிறப்பைக் கூறாது. அவரைக் கவி என்றால் பொருந்தும். ஆனால் அது கம்பனைப் பூரணமாக விவரிக்காது. அமரகவி என்றால் பொருந்தும். கம்பனுக்கு முன் கவிகளும், அமர கவிகளும், அழியா இலக்கியங்களும் ஏற்பட்டிருந்ததால், இச்சொற்கள் வழக்கிலிருந்தன. நம் நாட்டு ஆன்மீகப் பரம்பரையில் துறவி, சன்னியாசி, முனிவர், ரிஷி, யோகி, அவதாரப் புருஷர் என்ற கருத்துகள் உண்டு. இவற்றை நாம் அறிவோம். விபூதி, அவதாரம் என்பவை தெய்வீகமானவை. சிவாஜி போன்றவரை விபூதி எனவும், இராமன், கிருஷ்ணன் போன்றவரை அவதாரம் எனவும் கூறுகிறோம். இராமனும், கிருஷ்ணனும் தெய்வலோக (overmental) அவதாரங்கள். ஸ்ரீ அரவிந்தர் சத்தியஜீவிய அவதாரம். ஸ்ரீ அரவிந்தர் அவதாரம் என்றால், பிரதமரை முதல்வர் என்பது போலாகும். 1956இல் சி. சுப்ரமணியம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவைத் துவக்கிப் பேசினார். அன்று மேடையில் தமிழ் உலவாத நேரம். சுப்ரமணியம் தமிழில் பேச ஆரம்பித்தார். முதற்சொல் தமிழ் என்றவுடன் மாணவர்கள் பெருத்த ஆரவாரத்துடன் கை தட்டினர். கல்லூரி பிரின்சிபால் என்ற சொல்லுக்கு முதல்வர் என்ற சொல் அன்று வழக்கிலில்லை. மந்திரிக்குப் பிரின்சிபால் என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பதிலாகத் தமிழ்ச் சொல் கூற ஆசை. என்ன சொல்வது என்று அவருக்குத் தெரியவில்லை. தெரிந்த சொல்லைச் சொன்னார், "தலைமையாசிரியர் அவர்களே....." எனப் பேச்சைத் தொடங்கினார். பிரின்சிபால் ஆசிரியர்கட்குத் தலைமை வகிப்பதால் தலைமை ஆசிரியர் என்பது தவறான சொல்லில்லை. நாட்டு நடைமுறையில் தலைமை ஆசிரியர் என்பது பள்ளித் தலைமை ஆசிரியரைக் குறிப்பதால் நூற்றாண்டு விழாவில் விருது பெறவிருக்கும் பிரின்சிபாலுக்கு ஏமாற்றமாய்விட்டது. பகவான் ஸ்ரீ அரவிந்தரை பலர் ரிஷியாகக் கருதினர். அவருடைய சிஷ்யர்கள் அவதாரம் என்றனர்.



அது கல்லூரி முதல்வரைத் தலைமை ஆசிரியர் எனக் கூறுவது போலாகும்.

Sri Aurobindo is not God, but a portion of God. பகவான் கடவுளில்லை. கடவுளின் ஒரு பகுதி என்று அன்னை கூறுகிறார். பகுதியென்றால், இராமன் முனிவர் உலகத்தின் அவதாரம். கிருஷ்ணன் தெய்வலோக அவதாரம். ஸ்ரீ அரவிந்தர் அதைக் கடந்த சத்தியஜீவியலோக அவதாரம் என்பதால், அவதாரம் என்ற சொல் அவருடைய ஆன்மீக அம்சத்தின் சிறப்பை வெளிப்படுத்தாது. அவரை Supramental Avatar சத்தியஜீவிய அவதாரம் எனலாம். The Life Divineஇல் 17 ஆம் அத்தியாயத்தில் Divine Soul விவரிக்கப்படுகிறது. தமிழில் தெய்வீக ஆன்மா என மொழிபெயர்க்கலாம், பொருத்தமாகாது. அவ்வத்தியாயம் பகவான் அவதாரத்தை விளக்கும். சத்தியஜீவியலோகத்தில் பகுதியில்லை. அங்குப் பகுதி முழுமையுடையது. சத்தியஜீவியலோகத்தில் பகுதி என்றால் அது முழுமையான கடவுள் என்றாகும். பகவான் ஸ்ரீ அரவிந்தர் கடவுளின் முழுமை பெற்றவர். அவதார நிலையைக் கடந்தவர்.

"நீங்கள் பிரார்த்திப்பதுண்டா?" என ஒரு சாதகர் பகவானைக் கேட்டபொழுது, "யாருக்குப் பிரார்த்திப்பது?" என பதிலாக ஒரு கேள்வியைக் கேட்டார். அது அவர் யார் என்பதைக் காட்டும். 1938இல் காலை முறித்துக் கொண்டபொழுது, "என்னைத் தீயசக்திகள் தாக்கா" என நான் நினைத்தது சரியில்லை என்றார். தாமே முழுமுதற் கடவுளானபின் தீயசக்திகள் எப்படித் தாக்கும் என்பது உண்மை.

முழுமுதற்கடவுளானாலும், மனித உடலில் பிறந்ததால் மனித சட்டத்திற்கு உட்படவேண்டும் என்பதும் உண்மை. "நான் என்ன சர்க்கார் கஜானா என நினைத்தாயா?" என்ற வாக்கு சர்க்கார் கஜானாவில் உலகத்துப் பணம் அனைத்தும் உள்ளது எனப் பொருள். அன்று - சுதந்திரத்திற்குமுன் - சர்க்கார் செய்த வேலைகள் நாட்டில் ஒழுங்கை நிலைநிறுத்துவது மட்டுமே. மக்கள் வாழ்வில் பங்கு கொள்ளவில்லை. ஒருவர் படிக்கவேண்டுமானாலும், வேலைக்குப்

போகவேண்டுமானாலும், தொழில் செய்யவேண்டுமானாலும் அது அவரவர் பொறுப்பு. இன்று எவர் படித்தாலும் அச்செலவு சர்க்காருக்குரியது, எவர் பயிரிட்டாலும் மின்சாரம் சர்க்கார் செலவு, யார் தொழில் செய்தாலும் சர்க்கார் முதலில் பகுதியைத் தருகிறது. மக்கள் வாழ்வில் பங்குகொண்டு, வாழ்வுத் தரத்தை உயர்த்த சர்க்கார் முனைவதால் சர்க்கார் கடன் வாங்குகிறது, "கஜானா காலி" என்ற செய்தி வருகிறது.

பகவான் ஸ்ரீ அரவிந்தர் முந்தைய அவதாரங்கள்போல் எடுத்துக்காட்டாக வரவில்லை. வாழ்வின் யோகத்தை, புவியின் யோகத்தை தாமே ஏற்று பூரணயோகமாகச் செய்தார். அதனால் அவருடைய சக்திக்குச் செலவு அதிகம். தீயசக்திகள் நேரம் பார்த்துத் தாக்க முடியும்.

நவம்பர் 24இல் அவர் பெற்ற சித்தி தெய்வீகலோக சித்தி. அவர் செய்த யோகம் திருவுருமாற்றம். மனித நிலையை உயர்த்தும் யோகம். மனித நிலைக்குமேல் முனி, ரிஷி, யோகி, தெய்வம், சத்திய ஜீவியம் என்ற நிலைகளுண்டு. அலிப்பூர் ஜெயிலில் உள்ளபொழுதே - 1910இல் - பகவான் சத்தியஜீவிய அனுபவத்தைப் பெற்றார். இந்த சித்தியில் உள்ள நிலைகள் மூன்று.

1. *சத்தியஜீவியத்தை எட்டுவது.*
2. *ஒவ்வொரு நிலையாக உயர்ந்து, அந்நிலை கீழ்நிலையை பூரணமாகப் பூர்த்தி செய்வது.*
3. *இரண்டாம் முறையாக சத்தியஜீவியத்தை எட்டுவது.*

முடிவாக சத்தியஜீவியத்தை எட்டியபின் சத்தியஜீவியம் உலகை ஏற்பது. அது நடக்க 12 யோகிகள் தேவை. அலிப்பூர் ஜெயிலில் சுத்த அத்துவைத சித்தி - அக்ஷர பிரம்மத்தை அடைவது - முடிவன்று, சத்தியஜீவியமே முடிவு என்று சுவாமி விவேகானந்தர் கூறிப் போனார். பகவான் ஸ்ரீ அரவிந்தருக்கு இலட்சியம் தெரிந்துவிட்டது. அதை அடையும் வழி தெரியவில்லை. 10 ஆண்டுகளாக அதைக்



கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறுகிறார். முடிவாக அவர் கண்டுபிடித்ததை முதல் புத்தகம் 28ஆம் அத்தியாயத்தில் கூறுகிறார்.

1. *பரம்பொருளை பிரபஞ்சம் வழி அடையவேண்டும்.*
2. *அதற்கு உள்மனம் வழி அடி மனமடைந்து, மீண்டும் மேலே போகவேண்டும்.*

இதுவரை ரிஷிகள் செய்த ஹடயோகம், கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், மந்திரயோகம், தந்திரயோகம், ராஜ யோகம் ஆகியவற்றிலிருந்து பூரணயோகம் வேறுபடும் இடம் இது.

1. *மரபு உள் மனத்துடன் முடிகிறது.*

   **பூரணயோகம் அதைக் கடந்து அடிமனம் சென்றடைகிறது.**
2. *மரபு தேடுவது ஜீவாத்மாவுக்கு மோட்சம்.*

   **பூரணயோகம் உலகுக்குத் திருவுருமாற்றம் தேடுகிறது.**
3. *தூய ஆத்மா, பரமாத்மாவை அடைவது மரபு.*

   **சைத்தியப் புருஷன் ஆன்மீக மனம் வழி சத்திய ஜீவியம் அடைவது ஸ்ரீ அரவிந்தம்.**

ஓர் ஆத்மா தான் விடுதலை பெற முயன்று வெற்றி பெறுவது மரபு. ஓர் ஆத்மா தன் வளரும் பகுதியால், மோட்சம் அடைவதைத் தியாகம் செய்து, முனிவர், ரிஷி, யோகி, தெய்வம் வழி சத்தியஜீவியத்தை அடைந்து அதை உலகுக்குக் கொண்டுவந்து உலகை இருளிலிருந்து விடுவித்து, மரணம், நோய், மூப்பு, வலியிலிருந்து விடுவிப்பது பூரணயோகம். இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்,

- *மரபு மனத்தால் பகுதியாகச் செயல்படுவது ஆன்மீக சுயநலம்.*
- *பூரணம் சத்தியஜீவியத்தால் முழுமையாகத் திருவுருமாறுவது இறைவனுக்கு நாம் செய்யும் சேவை.*

பூரணயோகம் இறைவன் திருவுள்ளத்தைப் பூர்த்தி செய்கிறது. நவம்பர் 24, 1926இல் என்ன நடந்தது?

பகவான் ஸ்ரீ அரவிந்தர் அலிப்பூரில் சத்தியஜீவிய தரிசனம் கண்டார். உலகை நாராயணனாகக் கண்டார். அர்ஜுனன் கண்ட விஸ்வரூபம் இரு பகுதியானது. அவற்றுள் ஒன்று உலகம் கோரமானது. ஸ்ரீ அரவிந்தர் கண்ட நாராயண தரிசனம் கோரத்தைக் கடந்த பூரணம் முடியாக அமைந்தது. சத்தியஜீவியத்தை முதன்முறையாக மின்னலாக பகவான் கண்டபின் புதுவை வந்து முறையாக, அடியிலிருந்து யோகத்தை ஆரம்பித்தார். அதன் நிலைகள்,

- *மனித மனத்திலிருந்து முனிவர் மௌனத்திற்கு உயர்வது முதல் நிலை.*
- *மேலே சென்றால் அந்நிலையின் மௌனம், மனத்தையும் மற்ற பகுதிகளையும் வந்து நிரப்புவது* (descent) *பூரணயோக நியதி.*
- *ஒரு நிலை உயர்ந்தால் அந்நிலை யோகியின் ஜீவனை நிரப்புவது அடுத்த கட்டம் செல்ல அவசியம்.*

முதல் 5 வகுப்புப் படிப்பை உலகம் பெற ஆரம்பித்தால், உலகம் முழுவதும் அதைப் பெற்றபின் 10ஆம் வகுப்புப் படிப்பை பெற உயருவது வழக்கம். அதுபோல் முனிவர் நிலை என்பது முதல். அது மௌனத்திற்குரியது. ரிஷியின் நிலை திருஷ்டி தருவது. அது அடுத்தது. யோகி ஞானம் பெற்றவர், அடுத்த நிலை அது. தெய்வம் பெற்றது ஞானம் என்றாலும், அஞ்ஞானம் இடையூறு செய்யாமல் செயல்படும் நிலையில் தெய்வம் உள்ளது. முனிவர், ரிஷி, யோகி ஆகியவர் உடலில் வாழும் மனிதர்கள். தெய்வத்திற்கு உடலில்லை. அதன் சூட்சுமச் சரீரம் பூமியளவு பெரியது. தெய்வத்திற்கு நம்மைப்போல் குணங்களுண்டு, அகந்தையுண்டு, அஞ்ஞானம் உண்டு, என்றாலும் அஞ்ஞானம் தடை செய்யாமல் செயல்படும் திறனும் உண்டு. சத்தியஜீவியம் செல்ல தெய்வலோகம் வழியாகப் போகலாம். ரிஷி, தெய்வ நிலையை அடையாமல் நேராக சத்தியஜீவியம் சென்றடையலாம். தெய்வலோகத்திற்கும், சத்தியஜீவியத்திற்கும் இடையே புத்தர் பெற்ற நிர்வாணம் உண்டு. நிர்வாணம் பெற்றால் சத்தியஜீவியத்தை அடைவது எளிது. பெறாமலும் போகலாம். M.A. படித்தபின், M.Phil. பெறுவது Ph.D. பெற உதவியாக இருக்கும்.



M.Phil. பெறாமல் M.A.யிலிருந்து Ph.D. போக சட்டம் உண்டு. M.Philஇல் I class பெறுவது இயல்பு. M.A.யில் I கிளாஸ் பெற்றால் M.Phil.ஐத் தவிர்த்து Ph.D. எடுக்கலாம். M.A.யில் 55%க்கு மேல் மார்க் பெற்றாலும் எடுத்துக்கொள்ள சட்டம் அனுமதிக்கும். நிர்வாணம் அது போன்றது.

புதுவையில் பகவான் செய்த யோகம் படிப்படியாக அவர் உயர்வதும், உயர்ந்த நிலை கீழே வந்து அவர் ஜீவனைப் பூர்த்தி செய்வதாகவும் அமைந்தது. 1926இல் அப்படி அவருடைய யோகம் overmind தெய்வநிலையை அடைந்து, அந்நிலை பகவான் மனத்திலும், வாழ்விலும், உடலிலும் இறங்க ஆரம்பித்தது. அதுவே அவர் பெற்ற சித்தி. சத்தியஜீவியம் அடுத்தது. அது 1936இல் பகவானுக்குச் சித்தித்தது.

இன்று உலகுக்கு USA தலைமை வகிக்கிறது. செல்வம் நிறைந்த நாடு. உலகப் போரை வெல்ல ஆயுதம் தயாரித்தது. உலக வங்கியை நிறுவியது. ஐ.நா.வை நிறுவியது. அதுவரை இங்கிலாந்து உலகத் தலைவனாக இருந்த நிலை மாறி தலைமை அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் சென்றது. 1990இல் ரஷ்யா அத்தலைமையை இழந்தபின் USA ஏகபோக சாம்ராஜ்யம் நடத்துகின்றது. நம்மவர் உடுக்கும் உடை, சாப்பிடும் உணவு, பயன்படுத்தும் பொருள்கள், பல்கலைக்கழகங்களில் படிக்கும் பட்டம் ஆகியவை USA கொடுத்த பாணி. நம் நாட்டில் எவரும் சீண்டப்படாத மகான்கள் அமெரிக்கா போய் பிரபலமானால் அதன்பின் இந்தியாவில் பிரபலமாகின்றனர். அமெரிக்கா உலகத் தலைவன்.

அதைப் பெற USA செய்ததென்ன? 400 ஆண்டுகளாக உழைத்து செல்வம் ஈட்டியது. அது உடல் செய்யக்கூடிய அனைத்தையும் செய்து முடித்தது. அத்துடன் பொருளைப் பெருக்கியது. பொருளைப் பெருக்கும் முறையை ஸ்தாபனமாக்கியது. Organised production. அது அடிப்படை. அவ்வடிப்படையின் பேரில் அறிவை வளர்த்தது. அது அறிவு, ஞானமில்லை. அதனால் அது தடையாகிறது.

தடையான அறிவு தடையற்ற செல்வத்தை ஈட்டுகிறது. தலைகீழே மனிதன் வளர உதவுகிறது. மேலும் ஆன்மீகத்தைத் தேடுகிறது. ஆன்மீகத்தை இந்தியன் அந்நாளில் தேடியதுபோல் ஹடயோகத்தில் தேடுகிறது. ஆரம்ப நிலையில் இது அசுர முயற்சி.

இந்தியா ஞானம் பெற்று பல்லாயிரம் ஆண்டுகளாயின. பெற்ற ஞானம் பெரியது எனினும் முழுமையானதன்று. அதை நாடு முழுவதும் பெறவில்லை. பெற்றவர் தாமே வைத்துக்கொள்ள முயன்றனர். உலகத்தின் முயற்சி ஒருவரில் பலிப்பதால், பெறுவது கொடுப்பதற்காக. பெற்றவர் உலகத்தின் சார்பாகப் பெற்றார், தாமே எடுத்துக்கொள்ள முடியாது. முயன்றால் கரு கிடைக்காது, கருகிய புறம் கிடைக்கும். பெற்றவர் சந்ததிகளுக்குப் பெரிய ஞானம் வரவில்லை. கிடைத்தது ஜீவனற்ற சொல். அது பொய்யின் உறைவிடம். இருப்பினும் இந்தியர் உடலில் அன்று பெற்ற ஆத்ம ஜோதியிருப்பதாக அன்னை கூறுகிறார். மேல்நாட்டார் உடல் இருளால் நிறைந்தது என்கிறார். உடல் இருளானாலும், மேல்நாட்டார் ஜடத்தில் பிரம்மத்தைக் கண்டு விஞ்ஞான வெற்றி பெற்றனர். அதன் விளைவாக அமெரிக்கா உலகுக்குத் தலைமை வகிக்கிறது.

நம் உடலில் ஜோதியிருந்தாலும் வாழ்வில் ஜீவனில்லை, சொல்லில் சத்தியமில்லை. உடல் பெற்ற ஜோதி உயிர் பெற்று வாழ்வில் வெளிப்படுவது அமெரிக்கா பெற்றதைவிடப் பெரியது. இதை இந்தியர் அறியவில்லை. அறிந்தால் ஏற்படுவது ஆன்மீகப் புரட்சி. வாழ்க்கை வளமாகும். இந்தியா ஜகத்குருவாகும் என்பது பகவான் அருளியது. இந்தியாவும், ஆசியாவும் சுதந்திரம் பெற்று உலகம் ஒன்றுபட்டால், இந்தியா ஜகத்குருவாகி சத்தியஜீவன் பிறப்பான் என பகவான் கூறினார். முதலிரண்டும் அவர் வாழ்நாளில் பூர்த்தியாயின. உலகம் ஒன்றுபடும் அறிகுறி 1916இல் பகவான் கூறியபடி ஐரோப்பாவின் மேற்பகுதி நாடுகள் இணைந்துள்ளன. இந்தியர் ஆன்மீக விழிப்புற்று அடுத்த நிலையை அடைய சத்தியத்தை இலட்சியமாகக் கொண்டால் அது நடைபெறும். பகவான் இலட்சியம் நிறைவேறும்.

✪ ✪ ✪



## அன்பர் கடிதம்

நான் BSNL அலுவலகத்தில் மதுரையில் பணிபுரிகிறேன். கடந்த 8 வருடங்களாக நான் மதர் 'டிவோட்டி'. அன்னை நடத்திய அற்புதங்கள் எனக்கு நிறையவே நடந்து ஒவ்வொரு விஷயத்திலும் அன்னையைத் தீவிரமாக நம்புவதால் எனக்கு வெற்றிதான் இன்றுவரை. எல்லாமே சுமுகமாகவே நடந்துகொண்டு வருகிறது. என்னைச் சார்ந்த மற்ற அன்னை அன்பர்கட்கும் சேர்த்து - நான் தியானம் செய்யும் நேரம் - முதலில் உலக க்ஷேமத்திற்காக, பிறகு எல்லாவற்றையும் அன்னைக்குச் சமர்ப்பணம் என ஒரு 30 நிமிட நேரம் தினமும் கடைப்பிடிக்கிறேன். இதன் பலன் மூலம் நான் கண்கூடாக, நம்பமுடியாத ஆனால் நம்பத்தகுந்த ஓர் அனுபவத்தை இக்கடிதம்மூலம் தெரியப்படுத்துகிறேன்.

எங்கள் BSNL அதிகாரி ஒருவரின் மனைவி மதுரை வெயிலில் ஒரு நாள் தலை சுற்றி விழுந்து, 'கோமா' ஸ்டேஜ்வரை சென்றுவிட்டார். அவரை ஆஸ்பத்திரியில் ரொம்ப ஸீரியஸான நிலைமையில் சேர்த்த தகவல் கேட்டு எங்கள் ஆபீஸ் முழுதும் ஆஸ்பத்திரிக்குச் சென்று ICUவில் சேர்த்த அவரை வெளியில் இருந்தபடி பார்த்துவிட்டு சென்று கொண்டிருந்தனர். அங்குச் சேர்த்த மறுதினம் காலை டாக்டர்கள் ஏதோ கூடிகூடிப் பேசிவிட்டு, வெளியே நின்ற எங்களிடம் இன்னும் ½ மணி நேரத்தில் அவரது உயிர் பிரிந்துவிடும் என்றும், உங்கள் ஆபீஸர் எங்கே? எனவும் வினவினர். ஆபீஸர் அச்சமயம் வீடுவரை சென்றிருந்தார். நாங்களும் அவர் வீட்டிற்குப் போன் போட்டு அவரை உடன் வரும்படிக் கூறினோம்.

அங்கு இருந்த எனக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. அதே ஆஸ்பத்திரியில் கீழே ஒரு 'மதர்' போட்டோ மாட்டி இருக்கிறது. உடனே நான் வேகமாகச் சென்று இரண்டு நிமிடம் பிரார்த்தனை செய்துவிட்டு, 'எதுவும் டாக்டர் கூறியபடி நடக்கக் கூடாது மதர், அவர்கள் நல்லபடியாக வீடு திரும்பவேண்டும்' என மனமுருகி

பிரார்த்தனை செய்து மாடிக்கு வந்தேன். ½ மணி நேரமும் கடந்தது. உடனே அங்குள்ள டாக்டர்கள், 'patient is OK now' என்றார்களே பார்க்கலாம். அரை மணி நேரம் உயிருக்கு கெடு கொடுத்த டாக்டர்தானா அதைச் சொல்கிறார் என்று மீண்டும் 'கன்பர்ம்' செய்துவிட்டு, அங்கிருந்தபடியே இது ஒரு மிராக்கல் (miracle) என்று நான் கத்திவிட்டேன். உடனே அலுவலகம் வந்து அந்தக் கண்கண்ட தெய்வ அன்னைக்குச் சிறு காணிக்கையும் அனுப்பி வைத்தேன். தற்போது அந்த அதிகாரியின் மனைவி நல்லபடியாக குணம் அடைந்து வீட்டில் இருக்கிறார். அவர்கட்காக நான் இன்னமும் அவர் நலனுக்காக மதரிடம் தினமும் pray செய்து வருகிறேன்.

'அன்னையை நம்பினோர் கைவிடப்படார்' என்ற குறிக்கோளோடு வாழ்ந்து வருகிறேன். நன்றி!

☆ ☆ ☆

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜபம் வாயால் உச்சரிக்கப்படுவது. ஜபத்தை மேற்கொள்பவர்கள் உடலின் நிலையிலேயே இருக்க வேண்டும். மந்திர சக்தி உணர்ச்சியைத் தொட்டால், அது ஆர்வமாகும். மந்திரத்தின் உட்பொருளை மனம் உணர்ந்தால், உலகை ஆளும் ஜட சக்தியை மனம் எட்டும். அதனால் சொல்லால் சொல்லப்பட்டது, உடனே நிகழும். ஜடத்தின் பிடியிலிருந்து மனத்தை விடுவிக்கும் முறை இது. (மனமும் உணர்வும் திருவுருமாற்றமடைந்த பின், உடலை மாற்ற அன்னை மந்திரத்தை மேற்கொண்டார்).

*உட்பொருளை மனம் உணர்ந்தால்*
*உலகையாளும் ஜடசக்தியை மனம் எட்டும்.*



## அன்பரும் - நண்பரும்

அன்பர் - நான் செய்யும் தொழில் நல்ல வருமானம் தரக்கூடியது. இதுவரை 8 ஆண்டுகளாகத் தொழில் நன்றாக நடந்தாலும், ஓஹோ என்று விரிவடையவில்லை. அட்வான்ஸ் என எனக்கு Rs.10,000வரை வந்துள்ளது. பெருந்தொகைகள் என் வழி வந்தன. எதுவும் கைக்கு வரவில்லை. ஒருமுறை பெருந்தொகை வந்தது. கொஞ்ச நாள் கழித்து அதைத் திரும்பத் தரவேண்டிய நிலை வந்ததே தவிர அது பலிக்கவில்லை.

இந்த எட்டு வருஷமாக நான் என் பழைய பழக்கங்களை விட்டு அன்னைக்குரிய சட்டங்களை ஏற்றுச் செயல்பட்டு வருகிறேன். **அன்னை ஒருமுறைகூடத் தவறியதில்லை.** ஒரு குறிப்பிட்ட விஷயம் உங்களைக் கேட்க விரும்புகிறேன்.

- **என் பழக்கம், நான் விஷயம் முடியும்வரை எதையும் எவரிடமும் கூறமாட்டேன். அது தவறாது பலிக்கும்.**
- **சம்பந்தப்பட்டவர் ஒருவர் விஷயங்களை வெளியில் சொல்வதுண்டு. அப்பொழுதும் கெட்டுப் போவதில்லை. பல சமயம் கெட்டுப் போகிறது. *வெளியில் சொல்லாத சமயம் ஒரு முறையும் கெட்டுப் போனதில்லை.***

நண்பர் - வெளியில் சொல்லாததால் கூடிவந்தது என்பது சரி.

வெளியில் சொல்லாததால் மட்டும் கூடிவரும் என்று கூறமுடியாது.

வெளியில் சொல்லாத விஷயம் ஏதாவது கெட்டுப் போயிருக்கிறதா என்று யோசனை செய்து பாருங்கள்.

அன்பர் - வெளியில் சொல்லாத விஷயம் கெட்டுப் போயிருக்கிறது என்பதைவிட, கூடிவராமல் போயிருக்கிறது. அதற்கு வேறு காரணங்கள் உள்ளன. வெளியில் சொன்னால் தவறாமல் கெட்டுப் போகிறது.

நண்பர் - முடிவாகக் கூறியது உங்கள் அபிப்பிராயம். எனக்குத் தெரிந்து நீங்கள் வெளியில் கூறியபின் கூடிவந்த காரியம் உண்டு. என் அனுபவமும் அதுவே. வெளியில் சொன்னால் கூடிவாராது என்பதை மறுக்க முடியாது. ஆனால் எந்தக் காரியமும் வெளியில் சொல்ல வேண்டும் என்று அவசியமில்லை. இனி சோதனை செய்வதைவிட நடந்த காரியங்களை யோசித்துப் பார்த்தால் என் அனுபவம்,

1. **வெளியில் சொல்வதால் காரியம் வளர்ந்து நாள் தள்ளிக் கூடிவந்தது.**
2. **சொல்வதால் மட்டுமே கெட்டுப் போனவை.**
3. **சொல்லியபின் மின்னல் வேகத்தில் இருமடங்காக நடந்தது.**
4. **முழு இரகஸ்யம் முழு வெற்றி கொடுத்தது.**
5. **முழு இரகஸ்யம் மயிரிழைகூட காரியம் கூடிவரப் பயன்படவில்லை.**

இவற்றுள் சட்டங்கள் எவை? அன்னைக்குரியவை எந்த சட்டங்கள், இனி எப்படி நடக்கவேண்டும், **இரகஸ்யத்தின் இரகஸ்யம் எது?** சட்டங்களை ஆராயுமுன் சில அனுபவங்களை ஆராய்வோம்.

1. **எல்லோரும் பொறாமைப்படக்கூடிய காரியத்தை, பொறாமைக்கேயுரியவர் முன்வந்து செய்து கொடுக்க முனைந்து காரியம் 15 மடங்கு பெருகி ஓரிரு மாதத்தில் முடிய வேண்டியது ஓரிரு வருஷத்தில் முடிந்தது. இது வெளிப்படையாக முதலிலிருந்து பேசப்பட்ட காரியம்.**
2. **தன் நிலைக்கு மீறிய செல்வம் - சுமார் 15 மடங்கு பெரிய வருமானம் - பெற முயன்றபொழுது அதை இரகஸ்யமாக வைக்க முடியாது என்றாலும் வெளிப்படையாகப் பேசாதபொழுது காரியம் 1 வருஷம் இழுபறியாக இருந்து எதிர்பார்த்ததில் 1¼ மடங்கு அளவில் விலை 40% கூடிவந்து தொடர்ந்த வெற்றியைக் கொடுத்து 5 ஆண்டுகள் முடிவில் வரவேண்டிய பெரிய வெற்றி வராமற் போய்விட்டது.**
3. **சொத்தின் மதிப்பைப்போல் 9 மடங்கு - ஒரு வகையில் 20 மடங்கு - முதல் தேடி வந்தது, வெளியில் சொன்ன ஒரே காரணத்தால் எதிரியால் ரத்து செய்யப்பட்டது. பொய்யான கோள் ரத்து செய்தது.**
4. **'இரகஸ்யமாக விளம்பரம் செய்' என்பதுபோல அரசியல் உலகில் சேவை செய்வதை உள்ளூரில் எவரும் அறியாமல் செய்தபொழுது உலக அரங்கில் பெருவெற்றி, முழு வெற்றியாயிற்று. வேலை 5 ஆண்டுகள் நடந்தது.**

நான் கூறியவற்றைப் பிறகு ஆராய்வோம். உங்கள் பிரச்சினையைக் கருதுவோம்.

அன்பர் - இதுவரை நான் பெற்ற அட்வான்ஸ்போல் 50 மடங்கு அட்வான்ஸ் கொடுக்க ஒருவர் முன்வந்தார். நான் வெளியில் இதைக் கூறவில்லை. அவர் கூறிய தேதிப்படி அட்வான்ஸ் கொடுக்கமுடியவில்லை.

நண்பர் - உங்களுக்கு இந்த அட்வான்ஸ் வந்து காரியம் முடிவது முக்கியமா அல்லது இரகஸ்யத்தின் தத்துவம் புரிய வேண்டுமா?

அன்பர் - தொழில் முக்கியம். அத்துடன் எனக்கு அன்னை சட்டத்தை அறிந்து பின்பற்றுவது முக்கியம்.

நண்பர் - அன்னை சட்டத்தைப் பின்பற்றி இந்தக் காரியத்தை முடித்து - அட்வான்ஸ் பெற்று - பிறகு இரண்டையும் ஆராய்ச்சி செய்வோம்.

அன்பர் - செயலாலோ, சொல்லாலோ, மனத்தாலோ, எதைச் செய்யச் சொன்னாலும், நான் உளமாரச் செய்கிறேன்.

நண்பர் - இப்படிக் கூறமுடியாது. தரைக்குமேல் 1 அடியில் நடக்கச் சொன்னால் நடக்க முடியுமா? அதுபோல் வேலைக்குத் தேவையான பல நிலைகளிருப்பதால் நான் அவற்றை விளக்கமாகக் கூறுகிறேன். உங்கள் தொழிலில் வரும் பெருந்தொகை - அட்வான்ஸ் - உங்கள் நிலைக்கு, இதுவரை பெற்ற வருமானத்தைக் கருதும்பொழுது பெரியது.

அன்பர் - மிகப் பெரியது. மிகமிகப் பெரியது.

நண்பர் - அன்னையே கொடுத்தாலும், அருள் செயல்பட்டாலும், நம் ஜீவன் பெற்றுக்கொள்ள இடம் கொடுக்கவேண்டும் அல்லவா?

அன்பர் - அப்படி என்னிடம் என்ன தடையிருக்கிறது?

நண்பர் - வந்துள்ளது பெரியது, பாத்திரம் சிறியது.



அன்பர் - அப்படியானால் வந்து வழிந்தோடுமல்லவா? தடையாக இருக்கிறதே.

நண்பர் - வரமாட்டேன் என்கிறது.

அன்பர் - வருகிறேன் என்று அறிவித்து, பிறகு வரமாட்டேன் எனச் சத்தியாக்கிரஹம் செய்கிறது.

நண்பர் - அருளுக்குத் தடை எது எது என்று தெரியுமன்றோ!

அன்பர் - ‘அன்னை’ நூலில் விலக்கப்படவேண்டியது என்று எழுதிய 30 குணங்களைக் கூறுகிறீர்களா?

நண்பர் - **அன்னைக்கும் அருளுக்கும் முதல் தடை எது என்று நாம் அனைவரும் அறிவோம்.**

அன்பர் - பொய்.

நண்பர் - நீங்கள் பொய் சொல்வதில்லை. உங்களுக்கு முக்கியமானவர் எவராவது பொய் சொல்வாரா?

அன்பர் - என் மனைவி வாய் ஓயாமல் பொய் சொல்வாள். பொய் சரளமாக வரும்.

நண்பர் - ஸ்ரீ அரவிந்தர் மனிதனுடைய குறை என எதைக் கூறுகிறார்?

அன்பர் - சுயநலம்.

நண்பர் - நீங்கள் இதற்கு எந்த அளவு விலக்கு?

அன்பர் - எனக்குப் பரநலம் என நான் கூறவில்லை. நான் மற்றவர்கள் போலிருக்கிறேன்.

நண்பர் - உங்களுக்கு அப்பொழுது மற்றவர்போல்தானே பலிக்கும்?

அன்பர் - **சுயநலம் தடை என்கிறீர்களா?**

நண்பர் - உங்கள் தொழில் பிறர் வருமானத்தைப் பெருக்குவது. பரநலமான தொழில்.

அன்பர் - அதனால் பலிக்க வேண்டுமே?

நண்பர் - உங்கள் பிரச்சினையை விட்டுவிட்டு சுயநலம் எத்தனை வகை எனப் பார்ப்போம்.

1. **அவசியத்தை முன்னிட்டு சுயநலமாக இருப்பது.**
2. **சுயநலம் இயல்பாக இருப்பது.**
3. **சுயநலம் சுபாவமாக இருப்பது.**
4. **சுயநலம் திறமையாக இருப்பது.**
5. **இயல்பு, சுபாவம், திறமை ஆகிய அனைத்தும் சுயநலமாக இருந்து நாம் சுயநலம் என்றறியாத அளவுக்குச் சுயநலமாக இருப்பது.**
6. **சுயநலம் சௌகரியமாக இருக்கும்வரை அதுவே நியாயம் என்று கருதுவது.**
7. **எல்லோரும் நம்மைச் சுயநலம் என்று கூறுவதை நாம் அறியாத அளவுக்குச் சுயநலமாக இருப்பது.**
8. **சுயநலத்தின் சுயம் பிரகாசத்தைப் பொய்யால் வெற்றியாக்கி அதைக் கொண்டாடுவது.**
9. **சுயநலத்தை வேறு பெயரிட்டுப் பெருமையாகக் கருதுவது.**
10. **அவ்வளவும் பிறருக்கு, எனக்கன்று என்று கூறும் 'பரந்தமனம்'.**



அன்பர் - இதைக் கடந்தும் சுயநலமிருப்பதுண்டா?

நண்பர் - உண்டு, அது வறுமை மனப்பான்மையால் ஏற்பட்டது.

அன்பர் - நாம் அதை தரித்திரம், இராசி என்கிறோம்.

நண்பர் - எந்த அளவில் சுயநலமிருக்கிறது என ஏற்றுக்கொண்டால், அதைப் பரநலமாக்க முயன்றால், தடை விலகி காரியம் முடியும்.

அன்பர் - என் நிலையை நீங்கள் சொல்லுங்கள்.

நண்பர் - நீங்கள் சொல்லலாம், சொல்லாமலிருக்கலாம், என்னைக் கேட்கக் கூடாது.

அன்பர் - 10 நிலைகளைக் கடந்த தரித்திர இராசியா என் நிலை?

நண்பர் - எனக்காகச் சொல்லாமல், அதன் உண்மையை உங்கள் மனம் ஏற்குமா?

அன்பர் - இவ்வுண்மையை ஏற்கவேண்டிய இடத்தில் - ஆழத்தில் - ஏற்றால் பலன் தெரியுமா?

நண்பர் - உங்களுக்கு அருகாமையில் பொய் அதிகமாக இருப்பதால், வழக்கம்போல் மனம் ஏற்றவுடன் பலன் தெரியாது.

அன்பர் - மனம் ஏற்றதைச் செயலில் வெளிப்படுத்த வேண்டுமா?

நண்பர் - ‘‘செய்துவிட்டு வருகிறேன்’’ என்றால் நான் பொறுத்திருக்கிறேன். இந்த மனமாற்றம் வந்தால் தொழில் கூடிவரும்.

அன்பர் - சொல்லிய அட்வான்ஸ் வருமா?

நண்பர் - நிச்சயம் வரும்.

அன்பர் - இரகஸ்யத்தின் சட்டங்களைக் கூறுவீர்களா?

நண்பர் - இரகஸ்யம் என்பது சூட்சுமப் பாதுகாப்பு. எனவே அது அவசியம். நல்ல காரியம் பொறாமையால் கெட்டுப் போவது அனைவரும் அறிவது. அதுபோக, நல்ல ஆரோக்கியமான உடலிலும், தொத்து வியாதி வருவதைத் தடுக்க முடிவதில்லை. சுத்தம், உஷார் தேவை. அதுபோல் காரியங்கட்கு சூட்சுமப் பாதுகாப்புத் தேவை. நமக்கு எதிரியாக இல்லாவிட்டாலும் மனிதர்கள் காரியத்திற்கு எதிரியாக இருப்பார்கள்.

அன்பர் - அது என்ன?

நண்பர் - பஸ்ஸில் போகும்பொழுது ஒருவர் பேசுவதை உடனுள்ள 4, 5 பேர் ஆர்வமாகக் கேட்டால், மற்றவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள். புதியதாய் பஸ்ஸில் ஏறியவர் ஒருவர் வீட்டிலும், ஆபீசிலும் ஒதுக்கப்பட்டவரானால் அவர், ''பிரபலமான சுமுகம், சந்தோஷத்திற்கு எதிரி''. பேசுபவரை அவர் பார்த்தவுடன் அவரால் மேலே பேசமுடியாது.

அன்பர் - கண் திருஷ்டிப் பட்டுவிட்டது என்பார்கள், அதைக் கூறுகிறீர்களா?

நண்பர் - சூட்சுமம் ஒருவர் கண்ணில் படவேண்டும் என்ற அவசியமில்லை. ஒருவர் சுவாரஸ்யமாகப் பேசுகிறார் என்றால், அதற்கெதிரான மனப்பான்மையுள்ளவர் பஸ்ஸில் எங்கிருந்தாலும், அவர் பேச்சுக்குத் தடை எழும்.



அன்பர் - நாம் சந்தோஷமாக இருப்பது பொறுக்கவில்லை என்கிறோம்.

நண்பர் - அன்னை, "சந்தோஷத்திற்கு எதிரான தேவதைகட்கு அது பொறுக்காது. அவை சந்தோஷத்தைக் கெடுத்துவிடும்" என்கிறார்.

அன்பர் - அப்படியானால் நாம் ஒன்றுமே செய்ய முடியாது. உலகில் பலரும் எப்படிச் செயல்படுகின்றனர்?

நண்பர் - இங்குப் பாதுகாப்புத் தேவை. ஒருவருக்கு இரகஸ்யம் பாதுகாப்பு. பதவி, செல்வம் சில சமயங்களில் பாதுகாப்பு தரும். அகந்தையில்லாவிட்டால் பாதுகாப்பு தேவையில்லை. அன்னையின் பாதுகாப்புண்டு. இடம், பொருள், ஏவல் தெரிந்து செயல்படுவது அவசியம். 'நாம்' என்ற முனைப்பில்லாவிட்டால் அன்னை அன்பர்கட்கு முழுப் பாதுகாப்புண்டு. **எவருக்கும் பொதுவாக நண்பராக 'எதிரி' ஒருவரிருப்பார். அவரை நம்புவோம். அவரிடம் மட்டும் சொல்லக் கூடாது என்பது விலக்கில்லாத சட்டம்.**

அன்பர் - சோதனை செய்யலாம்.

நண்பர் - சோதனை செய்யலாம். பழைய நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட சட்டங்களை ஊர்ஜிதம் செய்யும்.

1. **அனாவசியமாக எவரிடமும், எதையும் கூறாமலிருப்பது பொதுவாக நல்லது.**
2. **விஷயம் வெளியில் போய் எதிரிகளை எட்டினால் அவர்கள் காரியத்தைக் கெடுக்க முனைவார்கள். ஜெயிப்பார்கள்.**

**3.** **மனத்தால் கெட்டவர்கள், நண்பர்கள் உறவினராக இருந்து, நம் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இருந்தால் அவர்கள் விஷயம் அறிந்தால் நிச்சயமாக அவர்கள் எண்ணம் கெடுக்கும்.**

**4.** **பொதுக் காரியம் தனிமனித குணத்தால் கெடுவது குறைவு.**

**5.** **பெரிய நல்லெண்ணம், கெட்ட எண்ணத்தை மீறிப் பலிக்கும்.**

**6.** ***அகந்தையில்லாத அன்பர் அறிவோடு செய்யும் காரியம் எதனாலும் கெட்டுப் போகாது.***

**7.** **கெடுப்பது அகந்தை, வெளியில் போகும் விஷயமில்லை. இங்கு சோதனை விஷப் பரீட்சையாகும், தத்துவம் இதுவே.**

**8.** **நல்லெண்ணமுள்ளவர் அறிந்தால் காரியம் கூடிவரும்.**

**9.** **கெட்ட எண்ணம் உள்ளவரில் முக்கியமானவர் "நாமே''. நம் கெட்ட எண்ணத்தைவிட நமக்கு அதிகக் கெட்ட எண்ணம் வெளியிலிருந்து வாராது.**

**10.** **கெட்ட எண்ணத்தைவிட மோசமானது சுயநலம். அதிலும் அதிக சக்தி வாய்ந்தது நம் சுயநலம்.**

அன்பர் - முடிவாக எனக்கு என்ன சொல்கிறீர்கள்?

நண்பர் - அட்வான்ஸ் நான் சொல்லியதைச் செய்தால் வந்துவிடும். மேற்சொன்ன சட்டங்களில் உங்கள் அனுபவத்திற்கு மாறானது உண்டென்றால் அதற்கு விளக்கம் தரமுடியும். அன்னையின் 18 வால்யூம்களில் இது சம்பந்தமானவற்றைப் படித்துவிட்டால் ஐயம் எழாது.

அன்பர் - இனி நான் எப்படிச் செயல்படவேண்டும்?



**நான் என்ற முனைப்பு, பெருமை - கர்வம், திமிர் - இல்லாமல் அனாவசியமாக எவரிடமும் பேசாமல் காரியங்களைச் செய்தால் இரகஸ்யமிருந்தாலும், இல்லாவிட்டாலும் தொந்தரவு வாராதா?**

நண்பர் - அது சரி.

அன்பர் - டென்ஷன்?

நண்பர் - அது மட்டுமே எதையும் கெடுக்கும்.

அன்பர் - வெளியில் தெரிவதால் மட்டும் கெட்டுப் போகும் என்று கூறமுடியாதா?

நண்பர் - அது உண்மையில்லை.

☆ ☆ ☆

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பரிணாம சக்தியாக அன்னையை அறிந்துகொள்வது அன்னையை அறிவதாகும். அதனால் ஈர்க்கப்படுவது ஆர்வம். தன் முயற்சியை அன்னை சக்திக்குட்படுத்துதல் சமர்ப்பணம். இதை ஜடத்தின் ஆன்மாவில் அறிவது சரணாகதி.

*சக்தியாக அறிவதே அறிவது.*

**A child can destroy Europe when her organisation is perfect.**
**ஐரோப்பாவில் நாட்டு நிர்வாகம் உயர்ந்தது.**
**அது சிறப்பானால் ஒரு குழந்தை அதை அழிக்க முடியும்.**

இது ஸ்ரீ அரவிந்தர் கூறியது. இதைப் படிக்கும்தோறும் தனக்குப் பயமாக இருக்கிறது என்பார் அன்னை. இதனுள் உள்ள வாழ்க்கை இரகஸ்யம், யோக இரகஸ்யம், அழிவுக்குக் காரணம், அன்னை சக்தி எப்படி அழிவை ஆக்கலாக மாற்றும், அது நம் வாழ்வில் எப்படி தரித்திரத்தை அதிர்ஷ்டமாக மாற்றும் என்பதைக் கருதுவோம்.

ஒரு நிர்வாகம் 30 ஆண்டுகட்கு முன்பு சிறப்பாக பிரபலமாக இருந்தது. அதன் பிரபலம் செல்வமாயிற்று. சொத்து பிரம்மாண்டமானது, தொழிலாளிகள் ஏராளம், நிர்வாகம் சீரழிந்து ரூ.50,000 நஷ்டமாயிற்று. உயிருக்குப் பேராபத்து வந்து, பல உயிர்கள் மடிந்தன. அன்னை அன்பர் நிர்வாகத்தை ஏற்றார். மேற்சொன்ன சட்டம் ஆக்கலாகச் செயல்பட்டது. ஆபத்து விலகியது, அமைதி ஏற்பட்டது. நஷ்டம் சிறியதாக மாறி சிறு இலாபமாயிற்று. சிறு இலாபம் வளர்ந்து பெருஇலாபமாயிற்று. பெருஇலாபம் பிரம்மாண்டமான இலாபமாகி ரூ.32 இலட்சம் நிகர இலாபமாக நின்றது. மேற்சொன்ன அனுபவங்கள், உண்மைகள், அன்னைக்குரிய ஆக்கல் உண்மைகள் கீழ்க்கண்டவை.

1. **நிர்வாகம் உயர்ந்தால், இலாபம் அதிகமாகும்.**
   **நிர்வாகம் உயரஉயர இலாபம் குறையும்.**



2. **நிர்வாகம் சிறப்பானால், எதுவும் அசைக்க முடியாது.**
   **நிர்வாகம் மிகச்சிறப்பானால், எந்தச் சிறுவனும் எளிதில் அழிக்க முடியும்.**
3. **நிர்வாகம் வாழ்வில் உயர்ந்தது.**
4. **நிர்வாகம் ஆன்மீகத்திற்கு எதிரி.**

முதல் மகாயுத்தம் நடக்கும்பொழுது ஆரம்பத்தில் அன்னை புதுவையில் நேரு வீதியில் (அப்பொழுது டியூப்ளே வீதி என்று அழைக்கப்பட்டது) மாடியில் தங்கியிருந்தார். June 14ஆம் தேதி பாரீஸ் தாக்கப்பட்டது. ரேடியோ வாராத காலம், பேப்பர் செய்திதான் உண்டு. அன்னை அறைக்குக் காளி வந்து, பாரீஸ் சரணடைந்துவிட்டது எனக் கூறினாள். காளியின் சொல் பொய்யில்லை, மெய். அத்துடன் காளி கூறியதால் அது மெய்யாகும். அன்னைக்குக் காளி கூறியதன் உண்மை தெரியும். அந்த உண்மையை **அன்னை ஏற்க மறுத்து, தம் சக்தியைச் செயல்பட அனுமதித்தார்.** சரணடைந்த பாரீஸ் நகரத்தில் நுழைந்த ஜெர்மானியர், எங்கும் பிரெஞ்சுப் படையைக் காணவில்லை. அவர்கட்குச் சந்தேகம் வந்தது. ஏதோ மாயம் நடக்கிறது, நம்மை பாரீஸுக்குள் அனுமதித்து சூழ பிரெஞ்சுக்காரர் சதி செய்தனர் என்று நினைத்து, தாங்கள் பெற்ற பெரு வெற்றியை தரையில் போட்டுவிட்டு வெளியேறினர்!

❈ ***அழியவேண்டிய பாரிஸ் தப்பித்தது.***

❈ ***அழிவு, ஆக்கலாக மாறியது.***

❈ ***1914இல் அன்னை செயல்பட்ட நிகழ்ச்சியிது.***

எந்தச் சட்டமும் அன்னை சக்தியால் எதிராக மாறும். ஐரோப்பா அழியக் கூடாது என்பது அன்னையின் எண்ணம். அவர் எண்ணம் தவறாது செயல்படுகிறது.

☆ ☆ ☆

## அபரிமிதமான செல்வம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

### அன்றாட வாழ்வில் அருளின் அற்புதம் அனந்தம்.
### (Spiritual significance of a token act)

- **அணுவே பிரம்மம்.**
- **சிறிய காரியத்தினுள் சிருஷ்டியுள்ளது.**
- **சமர்ப்பணம் சிறப்பானால் சாதாரணச் செயலில் சர்வேஸ்வரன் வெளிப்படுவான்.**
- **கற்புக்கரசிக்குக் கடவுளின் அம்சம் உண்டு - ‘‘கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா’’ எனக் கேட்கும் திறன் கணவனின் பணிவிடைக்குண்டு.**
- **அன்னையின் சூழலில் நடக்கும் எந்தச் செயலும் உலகெங்கும் நடக்கும்.**

மேற்கூறிய கருத்துகள் தத்துவம், அன்னை கூறிய விளக்கங்கள், அன்பர்களுடைய அனுபவம். அழைப்பு என்பது மூச்சு விடுவதுபோல் ஆழத்திலிருந்து எழவேண்டும். Token act ஒரு காரியத்தைச் செய்தால் அதன்மூலம் உலகமே புரளும் என்பதால் நாம் ஒரு காரியத்தைச் செய்யலாம் என்று பொருளில்லை. மனத்தைத் தயார் செய்து பக்குவப்படுத்த வேண்டும். **பக்குவப்பட்டதற்கு அடையாளம் எரிச்சல் வரும் இடத்தில் சந்தோஷம் வரவேண்டும். இம்மனப்பக்குவம் போதாது. இனி எனக்குக் கொடுமை, கடுமை, எரிச்சல் வரும்படியானவை உள்ளேயில்லை என்று நமக்குப் புலப்படவேண்டும்.**

உடலால் செய்யும் வேலையில் ஆர்வம் வந்தால் திறமையும், தெம்பும் வரும். அறிவோடு அதையே செய்தால் ஆயிரம் மடங்கு செயல் உயரும். அமைதியாகச் செய்தால் காரியம் அற்புதமாகும்.



ஆர்வம் என்பது உணர்வு, அறிவு என்பது மனம், அமைதி ஆன்மா. ஆன்மா வெளிப்பட்டால் செயலில் திறமை உச்சக்கட்டத்திற்குப் போகும். ஒரு வேஷ்டியை சுருக்கி மோதிரத்தின் வழியாக செல்லும்படி அன்று இந்தியர் நெய்தனர் எனில் ஆன்மா நெசவில் வெளிப்பட்டது என்று பொருள். அந்த ஆன்ம ஒளி இந்தியருடம்பில் இன்றும் உள்ளது என்கிறார் அன்னை. வாயால் பேசுவது சத்தியமானால், கையால் செய்வது திறமைமிக்கதானால், உடல் சுறுசுறுப்பாக இருந்தால், வேலை செய்ய ஆர்வம் அதிகமானால், உள்ளொளி புறச்செயலில் வெளிப்படும். ஒன்று பதினாயிரமாகும். ஒரு token act செயலைச் செய்யுமுன் சமர்ப்பணத்தை ஏற்று, மனத்தை நிதானமாக்கி, ஆர்வமாக, தீட்சண்யமாகச் செயல்பட ஆரம்பித்தால், வழக்கமான பொய் வெளிவரும். அவற்றை அறவே விலக்கவேண்டும். எரிச்சல் எழும், எதிரியைக் கொளுத்தவேண்டும் எனக் கொதிக்கும். அது எதிராக மாறி, எதிரி நண்பனாகி, நண்பன் மீது நயமான பிரியம் வரும்வரை மனம் தயாராகவில்லை என்று நாம் அறியவேண்டும். மனம் தயாரானால் Life Response வாழ்வு நம் மனநிலையைத் தன் செயலால் சுட்டிக்காட்டும், சுட்டிக்காட்டியபடியேயிருக்கும்.

ஆன்மா செயலில் வெளிப்படாமல் திறமை உச்சக்கட்டத்திற்குப் போகாது. நெசவிலும், அஜெந்தா சித்திரங்களிலும், மாமல்லபுரம் சிற்பங்களிலும், பெண்களின் பவித்திரமான வாழ்விலும், சான்றோரின் அடக்கத்திலும், இந்தியர் வாழ்வில் இன்றும் இதைக் காண்கிறோம். மேல்நாட்டார் செயல்கள் அனைத்திலும் இவ்வான்மீக உயர்வு தென்படுகிறது. உடல் இருளாக இருக்கும்பொழுது செயல் ஆன்மாவை மேல்நாட்டில் காட்டுகிறது. உடல் ஒளியால் நிரம்பினாலும், செயல் இருளால் சூழப்பட்டிருப்பதால் இந்தியர் வறுமையிலிருக்கின்றனர்.

நாம் மேற்கொள்ளப் போகும் சிறு செயல் token act நம் உடலில் புதைந்துள்ள ஒளி செயலில் ஆன்மாவாக வெளிப்படவேண்டும். அப்படி ஒரு செயலை நாம் செய்து அதில் ஒன்று ஆயிரமாவதைக் கண்ணுற்றால், நாம் அடிப்படையில் தயாராகிவிட்டோம். அதன்பின்

நம் வாழ்வை அருளின் வெளிப்பாடாக ஆக்க முடியும். எப்பக்கம் திரும்பினாலும் அதிர்ஷ்டம் எதிர்கொள்ளும். வீட்டு மாடியில் கட்டும் புது அறை, தீபாவளிக்கு அனைவருக்கும் ஜவுளி எடுப்பது, மகனை பெரிய கோர்ஸில் சேர்ப்பது, ஆபீசில் செக்ரடரி எலக்ஷனுக்கு நிற்பது, பாக்கியான பிரமோஷனை சமர்ப்பணத்தால் பெறுவது, 100 ஏக்கர் பண்ணையில் ஓர் ஏக்கர் புதுப் பயிர் செய்வது, குடும்பத்தோடு காஷ்மீர் போவது போன்ற சிறு காரியத்தை முக்கியமானதாக எடுத்துச் சோதனை செய்யலாம்.

**மாடியில் புது அறை கட்டும் வேலையை உதாரணமாக எடுத்துக்கொள்வோம்.**

*எல்லாச் செயல்களையும் சமர்ப்பணம்*
*செய்யவேண்டும் என்பது அடிப்படை.*

சமர்ப்பணமாகாத செயல்களைச் செய்யக்கூடாது. சமர்ப்பணம் என்பது அன்னையை நினைத்துச் செயல்படுவது. அது முதல் நிலை. அதை மட்டும் செய்தால் token act வெற்றிகரமாக முடியும். அது வாழ்வில் அருளாகத் தொடரவோ, அதிர்ஷ்டமாக நீடிக்கவோ, முதல்நிலை சமர்ப்பணம் போதாது. மீண்டும் நம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டும். Token actஇல் முடிவான சமர்ப்பணத்தை நாடினால், அது முடிந்தபின் பெரிய ஆத்மாவுக்கு அருளும், சிறிய ஆத்மாவுக்கு அதிர்ஷ்டமும் தென்படும். தானே நீடிக்கும். செயலை சமர்ப்பணம் செய்யுமுன், அது உணர்வாக இருப்பதைக் காணலாம். அதற்கும் முன்நிலையில் எண்ணமாக எழுவதும் தெரியும். எண்ணம் எழுந்து, உணர்ச்சியாகி, செயலாக நிரம்புவதால் சமர்ப்பணம் எண்ணத்தில் ஆரம்பிக்க வேண்டும். எண்ணம் சமர்ப்பணமானால், எண்ணம் நம்மைவிட்டுப் போகும், அது மறந்துபோகும். இது எண்ணத்திற்கு முடிவான சமர்ப்பணம். இங்கு ஆரம்பித்தால் முடிவான பெரும்பலன் உண்டு. இதற்கடுத்த இரண்டு நிலைகளில் உள்ள சமர்ப்பணத்தையும் தெரிந்துகொள்ளலாம். நமது முயற்சி மனித வாழ்வில் சிறு முயற்சி என்பதால் அவை இப்பொழுது தேவையில்லை.



எண்ணம் மறந்துபோனபின், காரியத்தைத் தொடங்குமுன் உணர்ச்சி எழும். உணர்ச்சி எழுந்து நம்மை ஆக்கிரமித்து, வெளிப்பட்டபின்தான் நமக்குத் தெரியும். அதற்குமுன் தெரிய உணர்ச்சி விழிப்பாக இருக்கவேண்டும். விழிப்பாக இருந்தாலும் சமர்ப்பணமாகாது. காற்றைக் கையால் பிடிப்பது போலிருக்கும். அடுத்தகட்டப் பக்குவத்திற்கு உணர்ச்சி பிடிபடும், சமர்ப்பணமாகும். சமர்ப்பணமானால் உடல் புல்லரிக்கும், காரியம் மறந்துபோகும். இவ்வுணர்வு எழுந்தால், வீட்டில் அறை கட்டப்போனால், வீடு அமையும். முடிவான பலன் முதலிலேயே கிடைக்கும். உடல் உணர்ச்சி என்பது செயல். அது யோகத்திற்குரியது. இது பலிப்பது intolerable ecstasy பொறுக்கமுடியாத பூரிப்பு. எண்ணம் முழுவதுமாகச் சமர்ப்பணமானாலும், முதல் நிலையில் சமர்ப்பணமானாலும், நாம் சோதனையை மேற்கொள்ளலாம். இதற்குரிய முறைகளை உதாரணமாக விளக்கமாகக் கருதுவோம். சில முக்கியமான கருத்துகள்,

1. **நாம் செய்யவேண்டிய வேலைகளைப் பல பாகங்களாகப் பிரித்து, பகுதிகளைச் சிறு பாகங்களாகவும் பிரித்து, இனிப் பிரித்துப் பார்க்க எதுவுமில்லை என்ற அளவில் பிரித்து எழுதிக் கொள்ளவேண்டும்.**
2. **அவற்றை முழுமையாகவும், பகுதியாகவும், சிறு பகுதியாகவும் சமர்ப்பணம் செய்து சமர்ப்பணம் பூர்த்தியாகும்வரை காத்திருக்கவேண்டும்.**
3. **பிறர் செய்யக்கூடிய வேலைக்கு நம் உள்ளுணர்வின் பிரதிபலிப்பைக் கண்டு அதைச் சமர்ப்பணம் செய்யவேண்டும்.**
4. **காரியத்தைச் சமர்ப்பணம் செய்வதைவிட உணர்வு உள்ளே சமர்ப்பணம் செய்யப்படுவது முக்கியம். அவசரம் எழுந்தால் அவசரம் சமர்ப்பணத்தால் நிதானமாக வேண்டும்.**
5. **பொதுவாக நாம் நம்மை இக்கண்ணோட்டத்தில் தயார் செய்வது காரியத்தைவிட முக்கியம்.**

வீட்டில் கட்டும் அறைக்குரிய முக்கியப் பகுதிகள்:

- ❈ கார்ப்பரேஷன் உத்தரவு வாங்குவது, அதற்குரிய blue print தயார் செய்வது.
- ❈ பணம் நேரத்தில் கிடைக்க ஏற்பாடு செய்வது.
- ❈ காண்ட்ராக்டரிடம் பேசி முடிவு செய்வது.
- ❈ நாமே செய்வதானால், சிமெண்ட், கல், ஆட்கள் தயார் செய்வது.

மேற்சொன்னவற்றை ஒவ்வொன்றையும் தனித்தனி சிறு பகுதிகளாகப் பிரித்து நோட்டில் எழுதுவது. பணம் கையிலிருக்கலாம், பாங்கில் வாங்கலாம், கல் நாமே வாங்கி காண்ட்ராக்டரிடம் தரலாம், காண்ட்ராக்டரிடமே அதையும் ஒப்படைக்கலாம். நாமே வாங்குவதானால், அது புது அனுபவம். அதனால் நமக்கு முன் செய்தவர்களைக் கலந்து விசாரிக்க வேண்டும். காண்ட்ராக்டரே செய்வதானால் நாம் சும்மா இருப்பதற்குப் பதிலாக, இக்காண்ட்ராக்டர் ஏற்கனவே செய்த வேலைகளைப் பற்றி அவரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். அவர் செய்த வேலைகளைப் போய்ப் பார்க்கவேண்டும். நாம் செய்வது சரியானால், எதுவும் விட்டுப்போகவில்லை எனில் தப்பு வாராது. இப்படியெல்லாம் பார்த்தால் எந்த வேலையும் நடக்காது, ஓரளவுக்குமேல் துருவக் கூடாது என்ற எண்ணம் அடிக்கடி எழும். முடிவாக தவறு வரவில்லை என்றால் நாம் செய்தது தவறில்லை எனப் பொருள். ''அட, இதை மறந்துவிட்டேன்'' என்று பின்னால் சொல்லக்கூடிய நிலை எழக்கூடாது. முழு மனதுடன் நாம் செயலை அணுகும்பொழுது செயலின் நுணுக்கங்கள், தில்லுமுல்லுகள் தானே வெளிப்பட்டு அகலும். அதுவே சமர்ப்பணமான செயலுக்குரிய இலட்சணம். உதாரணமாக சிமெண்ட் கலவைக்கு நாம் பணம் நிர்ணயிக்கும்பொழுது 1:3 என நிர்ணயித்துப் பணம் கொடுத்தால் காண்ட்ராக்டர் 1:6 என்று போட்டால் என்ன செய்வது? நாமே உடனிருந்து ஒவ்வொரு கலவையையும் பார்ப்பது ஒரு முறை. சிறு வேலையில் அதைச் செய்யலாம். அதற்குரிய முறையென்ன? அதைச் செய்யாத காண்ட்ராக்டரை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அப்படிப்பட்டவர் நம்மை நாடி வருவது சமர்ப்பணம். நாமே முனைந்து ஒவ்வொன்றையும் பார்க்கலாம். அது குறைந்தபட்சம். தானே எல்லாக் காரியங்களும் சிறப்பாக நடக்கலாம். அது அதிகபட்சம். நம் மனநிலை எது? அதற்குரிய அளவுக்கு நாம் செயலைச் சீர்செய்வது சரியான முறை. வேலை சரியாக நடக்கிறதா, இல்லையா என்பதை மனமும், செயலும், புற நிகழ்ச்சிகளும், சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளும், சம்பந்தப்படாத நிகழ்ச்சிகளும், காட்டிக்கொண்டேயிருக்கும். அவற்றைக் கவனிக்கவேண்டும். Type செய்வதை இதுபோல் பாகுபாடு செய்வதில் 1) எழுத்துப் பிழை 2) இலக்கணப் பிழை 3) மார்ஜின் 4) அடுத்த பக்க மார்ஜின் 5) Spacing 6) எழுத்தின் சைஸ் 7) இங்கின் தெளிவு எனப் பிரிகிறது. எந்த வேலையும் 5 முதல் 10 சிறு பிரிவுகளாகப் பிரியும். அவற்றை எழுதி ஒவ்வொன்றிற்கும் தரம் - scale - நிர்ணயம் செய்து 1 முதல் 10 வரை பாயிண்ட் கொடுத்து நாம் 5ஆம் நிலையிலிருந்தால் 10ஆம் நிலைக்குப் போக முயலவேண்டும். 100 பக்க புத்தகத்தில் 1 பிழை இருப்பது 10 பாயிண்ட் குறைந்து திறமை 90% ஆகும். 2 பிழையிருந்தால் 80%க்குப் போகாது, 50%க்குப் போகும். அதற்குமேல் பிழையிருந்தால் அது வேலையில்லை, அது பிழை.

- ❈ **செய்வன திருந்தச் செய்.**
- ❈ **திருத்தமாகச் செய்வதை ஆர்வமாகச் செய்.**
- ❈ **ஆர்வத்திற்கு அறிவுண்டு.**
- ❈ **அறிவுக்கு அமைதியிருப்பது ஆத்மாவின் செயல்.**
- ❈ **அமைதியை சமர்ப்பணம் செய்.**

இதுபோல் அன்பர் செய்த வேலைகள் ஏராளம்.

- ❈ **ஒரு கிராமத்துச் சேவை நாட்டிற்கே பலன் தந்தது ஒரு திட்டம்.**
- ❈ **ஓர் ஏக்கர் நிலம் வாங்கச் செய்த முயற்சி 1000 ஏக்கரைக் கொண்டுவந்தது ஒன்று.**

* **ரூ. 10,000 வசூல் செய்ய முயன்றபொழுது 10½ லட்சம் வசூலானது மற்றொன்று.**
* **ஒரு கிராமத்திற்கு மின்சாரம் கொண்டுவர முயன்றது தமிழ்நாட்டிற்கே எல்லாக் கிராமங்களுக்கும் கிடைத்தது.**
* **ஓர் அன்பர் பெற்ற பிரமோஷன் அவர் போன்ற ஆயிரம் பேர் பெற்றது.**

நாம் திறமையை அதிகரிக்க முனையும்பொழுது நம்மை நாமே வற்புறுத்திச் செய்தாலும் காரியம் கூடிவரும், ஆனால் மனம் கல்லாகும். அது கடுமையாகும். அப்படி நிகழ்ந்தால், token act ஜெயிக்கும். ஓரளவு வளர்ந்து ஒரு நிலையில் நின்றுவிடும். கடுமை எழக்கூடாது, கனிவு வேண்டும். அடுத்தகட்டத் திறமையை ஆர்வமாக ஏற்று மனம் பூரித்தால், கனிவு எழும், கருணையாகும். முடிவில்லாத வளர்ச்சி முழுமையாக வரும்.

*முற்றும்.*

☆ ☆ ☆

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் ஒரு செய்தியை, நிகழ்ச்சியை, தானறிந்ததைக் கொண்டு புரிந்துகொண்டால், அது அபிப்பிராயமாக மாறுகிறது. அவற்றை ஆராய்ச்சி செய்தால், அதனுள் உள்ள கருத்து விளங்கும். செய்தி அல்லது நிகழ்ச்சி வந்தால் அதைச் சரணம் செய்தால் அதனுள் பொதிந்துள்ள ஒளி தெரியும்.

* *புரியும் அபிப்பிராயம்.*
  *ஆராய்ந்த கருத்து.*
  *பொதிந்துள்ள ஜோதி.*
* *அபிப்பிராயம் கருத்துமூலமாக ஜோதியாகிறது.*



# பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

அண்ணன் – இப்பெற்றோர் படித்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள், அன்பர்கள். ஆனால் இவையெல்லாம் தானே புரியுமா? சொன்னால் ஏற்பார்களா? நடக்கும் அளவுக்கு ஏற்பார்களா? அது நடக்க உதவுமா? என்பவை கேள்விகள்.

தம்பி – அன்னையைப் பெரும்பாலோர் ஏன் புரிந்து கொள்ளவில்லை என்பது இப்பொழுது தெரிகிறது. மழை வேண்டும் என்றால் பெய்கிறது என்று எத்தனைப் பேர் பார்க்கவில்லை? பணம் வேண்டும் என்றால் வரும் என அவர்கள் நம்புவார்களா?

அண்ணன் – ஓர் அன்பர் சொன்னார், "அன்னைக்குச் சக்தியிருப்பது சரி. மழை கேட்டால் தருகிறார்கள். வேறு பல விஷயங்களிலும் பலிக்கிறது. பணம் மட்டும் வரமாட்டேன் என்கிறது" என்றார். இவர் பணத்தைச் சரியாகச் செலவு செய்வதில்லை. அதனால் வருவதில்லை. பணத்தில் சிரத்தையாக உள்ள அன்பர்களைக் கேட்டால், "மதர் எது கொடுக்கிறார்களோ இல்லையோ, இன்று ரூ.8000 கட்டவேண்டும் என்றால், அது எங்கிருந்துதான் வருமோ, தெரியாது, வந்துவிடும்" என்கிறார்கள். யார் எந்த விஷயத்தில் சிரத்தையாக, முறையாக இருக்கிறார்களோ அந்த விஷயம் அபரிமிதமாகப் பலிக்கும்.

தம்பி – ஒரு விஷயத்தில் பலிக்கவில்லை என்றால், அந்த விஷயத்தில் அவர் சரியில்லை எனப் பொருள்.

அண்ணன் - முரட்டுக் குணமுள்ள தாயார், "என் பெண்ணைத் தவிர எனக்கு எல்லாம் பலிக்கும்'' என்கிறார். பெண் விஷயத்தில் பலிக்கவில்லை எனில் தாயாருக்கு அதே குணம். அது மாறினால் பலிக்கும். வேறு சிலர், அன்னை பலிப்பார்கள், ஆனால் நீங்கள் சொல்வது போல் ஓஹோ! என்றிருக்காது என்கிறார்கள். அவர்கள் குணம் ஓஹோ! என்றிருந்தால் பணம் அதுபோல் வரும்.

தம்பி - குணம் தடையாக இருந்தால் பேச வேண்டிய அவசியமில்லை.

அண்ணன் - அது மட்டும் போதாது. மலரும் மனம் (expansive) தேவை. மலர்ந்த உணர்ச்சி காரியத்தைப் பெருக வைக்கும். இறுக்கமான குணமிருந்தால் எதுவும் மலராது.

தம்பி - அப்படியானால், அன்னையாகப் பலிக்கமாட்டார்களா? நம்மைப் பொருத்துத்தான் பலனிருக்குமா?

அண்ணன் - தானே எல்லோருக்கும் பலிக்கும். அதற்கு அளவுண்டு. மலரும் மனம், பரந்த இலட்சியம் உள்ளவருக்கு அபரிமிதமாகப் பலிக்கும்.

தம்பி - 100 விஷயங்களை இப்பெற்றோர் புரிந்து கொள்ள வேண்டும் என்றீர்களே. சில உதாரணங்கள் வேண்டும்.

அண்ணன் -

1. **35ஆம் வயதில் குள்ளமானவர் வளர ஆசைப்பட்டார், 12" வளர்ந்தார்.**
2. **மார்க்கட் விலைக்கு விலை போகாத நிலம் 3 மடங்கு விலைக்குப் போயிற்று.**
3. **நின்றுபோன பேச்சுத் திரும்ப வந்தது.**
4. **சர்வதேசக் கமிஷன் கொள்கையால் பெர்லின் சுவர் அழிந்தது.**



5. **மெக்ஸிகோவில் தொலைந்த பர்ஸ் கிடைத்தது.**
6. **புதுச்சட்டம் வந்து உதவியது.**
7. **பாலைவனத்தில் பேருற்று எழுந்தது.**

நாமே சொல்லலாம், விளக்கம் தரலாம். அவர்களே புத்தகங்களைப் படித்து - சுமார் 500க்கு மேற்பட்டவை வெளியாகியுள்ளன - இவற்றைச் சேகரம் செய்து, ஏற்றுக்கொண்டு, பிறகு விபரம் கேட்கவேண்டும்.

தம்பி - இதைப் பற்றி தனியாகக் கட்டுரையிருக்கிறதா?

அண்ணன் - தனிக் கட்டுரையில்லை. படித்துச் சேகரம் செய்யவேண்டும்.

தம்பி - வேறு ஏதாவது இது சம்பந்தமாகச் சொல்லக் கூடியதுண்டா?

அண்ணன் - தினசரி வாழ்வு அன்னை வாழ்வாக வேண்டும். It must be full of energy and surprises. வளரும் தெம்பும், ஆச்சரியமும் கலந்ததாக வாழ்வு மாறினால் அன்னையை ஏற்றுக்கொண்டோம் என அறியலாம்.

தம்பி - அன்னை நம் வாழ்விலிருந்தால் நாம் செய்யும் காரியங்கள் பல மடங்கு பெருக வேண்டும். அதுவே அன்னையிருப்பதற்கு அடையாளம்.

அண்ணன் - வாழ்வு பல நிலைகளில் (layers) அமைந்துள்ளது. ஒரு நிலையில் வேலை செய்து அது பூரணமானால், அடுத்த நிலைக்குப் போகலாம். ஆபீஸ் பிரமோஷன் அதுபோலுள்ளது. குத்தகைக்காரன் நிலம் வாங்குவது, டிரைவர் கார் வாங்குவது உடனே நடப்பதில்லை. பல ஆண்டுகள் வேலை செய்தால் நூறில் ஒருவருக்குப் பலிக்கும். இன்று சமூக நிலை மாறியுள்ளது. டாக்ஸி

டிரைவர் கார் வாங்கத் திட்டம் உண்டு. வேலையில் சேர்ந்தவுடன் வீடு கட்டத் திட்டம் உண்டு. தாலுக்காபீஸ் குமாஸ்தா திறமைசாலியானால் டிப்டி தாசில்தார் பரீட்சை எழுதலாம், டிப்டி கலெக்டர் பரீட்சை எழுதலாம்.

தம்பி - வாழ்வு நிலைகளை நிதானமாகவே கடப்பது வழக்கமானாலும், உடனே தாண்டும் சந்தர்ப்பமும் உண்டு.

அண்ணன் - அன்பர் கிளார்க் உத்தியோகத்திற்கு விண்ணப்பித்தால், ஆபீசராக செலக்ட் ஆகிறார். ஒரே வருஷத்தில் 3 பிரமோஷன்கள் வருகின்றன. எல்லா நிலைகளிலும் (layers) அடுத்த நிலை ஒட்டிக்கொண்டிருக்கிறது. அவை உடனுக்குடன் தொடர்ந்து கிடைப்பது அருள் செயல்படுவதற்கு அடையாளம்.

தம்பி - அருள் செயல்பட நாம், "காரியத்தைவிட அன்னையை முக்கியமாக மனதில் ஏற்று ஆத்மாவில் சந்தோஷப்பட வேண்டும்".

அண்ணன் - காரியத்தைச் சிறப்பாகச் செய்ய வேண்டும். ஆனால் மனதில் அன்னை மட்டுமேயிருக்க வேண்டும் (Care-free attitude & causeless joy).

தம்பி - அதைத்தான் soul's freshness ஆத்மாவின் அற்புதம் என்று கூறுகிறார்களா? Freshness, spontaneity, opening, sincerity, receptivity, விழிப்பு, இயல்பாக இருப்பது, உண்மை, அன்னையை ஏற்கும் பாங்கு இவை முக்கியம்.

அண்ணன் - உணர்வால், மனதால் வாழாமல், ஆத்மாவால் வாழ வேண்டும். காரியத்தையும், பலனையும்விட



கடமையையும், சிறப்பையும் கருதவேண்டும். குழந்தையுள்ளமும், குணச் சிறப்பும் தேவை.

தம்பி - வயது முதிர்ந்த அனுபவமும், திறந்த வெள்ளை மனதும் தேவை. உயர்ந்த அனுபவமும், சிறிய குழந்தை மனசும் சேர்ந்திருக்க வேண்டும்.

அண்ணன் - நல்லது மட்டும் இருந்தால், அற்புதம் மட்டும் நடக்கும். ஆத்ம விழிப்புக்கு ஆனந்தம் மட்டுமே பரிசு.

*தொடரும்.....*

☆ ☆ ☆


**MALARNDHA JIVIYAM**

Form IV (See Rule 8)

Statement about ownership and other particulars about **Malarndha Jiviyam** (according to Form No.IV, Rule 8 circulated by the Registrar of Newspaper for India).

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Pondicherry |
| 2. | Period of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | **Mrs. Anuradha Sriram,** Integra, 51, II cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry 605 005. |
| 4. | Publisher's Name | : | **Mr. P.V. Balakrishnan,** 12, I Cross, Venkata Nagar, Pondicherry 605 011. |
| 5. | Editor's Name | : | **Karmayogi** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Plot 4, Venkata Nagar Extn., Pondicherry 605 011. |
| 6. | Name and address of the individual who owns the newspaper and partners or shareholders holding more than 1% of the capital. | : | **The Mother's Service Society,** Plot 4, Venkata Nagar Extn., Pondicherry 605 011. |

I, (P.V. Balakrishnan) hereby declare the particulars given are true to the best of my knowledge and belief.

Date : 01-03-2003

**(P.V. BALAKRISHNAN)**
Signature of the Publisher.

# இலட்சியத் திருமணம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

அங்கிள், நீ எங்க ஆபீஸ் ஆன்ட்டியை கல்யாணம் பண்ணிக்கப் போறியா என்றான் அர்விந்த்.

நீ என்று சொல்லக்கூடாது, நீங்கள் என்று அவசரமாய்த் திருத்தினாள் உமா.

அர்விந்தின் கேள்விக்கு மாப்பிள்ளைப் பையன் பதில் சொன்னான், உங்கள் ஆன்ட்டிக்கு என்னைப் பிடித்தால் கல்யாணம் செய்துகொள்வேன் என்று.

உமா வெட்கத்துடன் தலை குனிந்துகொண்டாள். உள்ளே சென்றதும், நான் உங்களை நல்ல தோழியாய் எண்ணி வெளிப்படையாய் கேட்கப் போகிறேன், கேட்கலாமா? என்றான்.

உமா மனதிற்குள் அன்னையே, அன்னையே என்று எண்ணியவண்ணம் தலையாட்டினாள்.

திருமணத்திற்குப் பிறகு மனைவியை அடிமைப்படுத்தி ஆளும் ஆண்மகன் அல்லேன் நான். நான் எடுத்த லட்சியத்திற்குத் துணை வரும் தோழிதான் எனக்கு வேண்டும் என்றான்.

லட்சியத்தைச் சொன்னால் நல்லது என்றாள். நான் என் இரத்தத்தில் உருவான குழந்தையை நேசிப்பது ஒன்றும் வியப்பில்லை. நமக்குப் பிறக்காத, நம் அன்பு பயன்படும் குழந்தைக்கு நாம் பெற்றோராக வேண்டும் என்று எனக்கொரு லட்சியம். இதனால் நான் ஆரோக்யம் குறைந்தவன் என்று எண்ணவேண்டாம். நான் பூரண நலமுள்ளவன்தான். ஆனால் என் பெற்றோர் இதற்கு உடன்படமாட்டார்கள். அதனால்தான் தனியாய் கேட்கிறேன். இதில் என்னை மணந்துகொள்ளும் பெண்ணுக்கும் பூரணச் சம்மதம் தேவை என்றான்.



உமாவிற்குப் பருத்தி புடவையாய் காய்த்ததுபோல், கும்பிடப் போன தெய்வம் எதிரே வந்தது போலவிருந்தது. உண்மையில் அவளுக்கும் அதே லட்சியம்தான். அவள் பெற்றோரும் அதை ஏற்கமாட்டார்கள்.

எனக்குப் பூரணச் சம்மதமே. ஆனால் என் பெற்றோரும் இதை ஏற்கமாட்டார்கள். நாம் நம் இலட்சியத்தில் உறுதியாயிருந்தால் நம் பெற்றோருக்குத் தெரியாதிருப்பதே நல்லது என்றாள்.

புன்னகையுடன் வெளிவரும் இவர்களை மகிழ்ச்சியுடன் பார்த்தனர் அனைவரும். திருமணம் உறுதியாயிற்று.

பாட்டி மனம் நிறைய வாழ்த்தினாள். உமா உன் நல்ல மனதிற்கு யாவும் நல்லதாக நடக்கும் என்றாள்.

திருமணத்தின்போதும் குழந்தைகளிருவரும் ஒரே மகிழ்ச்சியுடன் புதிய ஆடையணிந்து உமாவை வலம் வந்தனர். இப்போது எல்லோருக்கும் குழந்தைகள் உமாவின் பிரிவை எப்படித் தாங்கிக்கொள்வர் என்பதே கவலையாயிற்று. குழந்தைகளை யாரேனும் அருகில் வருவதைத் தடுத்தால், மாப்பிள்ளை உடனே, அவர்களைத் தடுக்கவேண்டாம், உமாவின் இந்த நல்ல குணத்திற்காகத்தான் அவளை மணப்பதாகக் கூறினான்.

இது சரி. நாளைக்குப் புகுந்த வீட்டிற்குப் போகும்போது இந்தக் குழந்தைகளைத் தள்ளிவிட்டுத்தானே போகவேண்டும் என்றாள் வாயாடிப் பெண்ணொருத்தி.

ஏன் தள்ளிவிட்டுப் போகவேண்டும். இவர்களின் உரிமையாளர்கள் சம்மதித்தால் அழைத்துக்கொண்டே போவோம் என்றான் மாப்பிள்ளைப் பையன்.

*தொடரும்.....*

☆ ☆ ☆

## அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## சொஸைட்டியின் வெளியீடுகள்

கர்மயோகியின் நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. 20 |
| 2. | மனம் - ஜீவனின் முக்கியக் கரணம் | ரூ. 20 |
| 3. | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. 20 |
| 4. | சிறியதும் பெரியதும் | ரூ. 20 |
| 5. | கணவன் மனைவி | ரூ. 20 |
| 6. | இரத்தினச் சுருக்கம் | ரூ. 20 |
| 7. | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. 50 |
| 8. | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.100 |
| 9. | அதிர்ஷ்டம் | ரூ.100 |
| 10. | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.100 |
| 11. | பிரார்த்தனை பலிக்க வேண்டும் | ரூ.100 |
| 12. | பரமனை நாடும் ஜீவாத்மா | ரூ. 20 |
| 13. | ஸ்வரூபம் சுபாவம் | ரூ. 20 |
| 14. | யோக வாழ்க்கை விளக்கம் - I | ரூ. 80 |
| 15. | ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் | ரூ. 60 |
| 16. | நூறு பேர்கள் (2 பாகங்கள் சேர்ந்தது) | ரூ.150 |
| 17. | வாழ்வின் அடிச்சுவடுகள் | ரூ. 60 |
| 18. | அன்னையின் வாழ்வில் | ரூ. 80 |

*தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து* **M.O.** *செய்யவும்.*

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

## நின் அருள் மறவாதன்றோ!

நீ மறந்தாலும், நின் அருள் மறவாதன்றோ என்பது இராமலிங்க சுவாமியின் வாக்கு. நீ என்பது Personal Divine தெய்வம், நின் அருள் என்பது impersonal divine power தெய்வத்தின் பின்னாலுள்ள பொதுவான தெய்வ சக்தி. அதை ஆன்மா Spirit என்கிறோம். சத் என்ற அகத்தின் புறம் சத்தியம். சத் என்பதின் அனுபவம் ஆன்மா. உலகம் ஆன்மாவாலானது. நாமும், நம் உடலும், உயிரும் ஆன்மாவாலானவை. அருள் ஆன்மாவின் செயல்பாடு என்பதால், அருள் உலகை எங்ஙனம் மறக்க முடியும்? நாம் தெய்வம் என்பது அருளைக் கடந்து சிருஷ்டியிலுள்ள நிலை.

அன்பருடன் பேசிக்கொண்டிருந்த நண்பர் புறப்பட எழுந்தார். நண்பர் மறதியுள்ளவர். அவரிடம் பல வேலைகளைச் செய்யும்படிக் கூறினால் ஒன்றிரண்டே நினைவிருக்கும். அவருக்கு நல்லெண்ணம். சுயநலமில்லை. தம் வேலைகளையே மறந்துவிடுவார். முன்பு ஒருமுறை அன்பர் இட்ட வேலையை நண்பர் மறந்தவர். இம்முறை அன்பர் நண்பரிடம் “என் மகனை வரச் சொல்” என்று கூற நினைத்தார். சென்ற முறை நண்பர் மறந்தது நினைவுக்கு வந்தது. அதனால் அன்பர், “எதிரில் intercom இருக்கிறது. அதில் என் மகனைக் கூப்பிடுங்கள். வெளியில் போனால் மறந்துவிடுவீர்கள்” என்றார். அன்பரால் எழுந்து நடக்க முடியாத நிலை. நண்பர் intercom அருகே போனவுடன் மகன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வருகிறான். இதை Life Response என்கிறோம்.

நம் மனம் அன்னை மீதிருந்தால், காரியத்தைவிட அன்னை முக்கியமானால் Life Response நடந்தபடியிருக்கும். அன்பருக்கு மகன் வரவேண்டுமானால் அன்னையிடம் கூறத் தோன்றவில்லை. நண்பரிடம் கூறுகிறார். நண்பர் மறப்பவர் என்றாலும் அன்னை நினைவு வரவில்லை. அறிவுக்குரிய அடுத்த முறை மனதில் எழுகிறது. தன்னை மறந்த அடுத்த முக்கிய முறையை அன்பர் நினைக்கும்பொழுது அந்த ஆழ்ந்த நினைவுக்கு அன்னை தம் அருள்மூலம் பதிலளிக்கிறார்.

✯ ✯ ✯

## மனம் திறந்து பேசினால் மதரிடம் பேசலாம்

இரண்டு ஆபீசர்கள். ஒருவர் பெரிய ஆபீசர். அடுத்தவர் இருவரிடமும் வேலை செய்யும் குமாஸ்தா. அனைவரும் அன்னை அன்பர்கள். 3 பேருக்கும் ஒருவர் மீது மற்றவர்க்கு அதிகப்பட்ட குறையுண்டு. அன்னைச் சட்டப்படி ஒருவர் மீது குறை சொன்னால் அது தன் குறை என்ற அறிவுண்டு. அறிவு செயலைக் கட்டுப்படுத்தாது. அதனால் குறை கூறும் படலம் அன்றாட அனுபவம். அவற்றுள் எவரிடமும் சொல்லமுடியாத குறையுண்டு. சிலரிடம் மட்டும் கூற முடியாதவையுண்டு.

சிறிய ஆபீசர் தாம் தவறு செய்துவிட்டு அதைக் குமாஸ்தா செய்ததாகப் பெரிய ஆபீசரிடம் கூறுவதை, குமாஸ்தா கேட்டுக் கொண்டிருந்தார். பொறுக்க முடியவில்லை. ஆத்திரம் பொங்கி வருகிறது. இப்படியும் ஓர் அன்பர் உண்டா? என மனம் பொருமி அடங்கியபொழுது, அன்னை படத்தின்முன் நின்று “உங்களிடம்தான் கூற முடியும். எவரிடமும் என்னால் முறையிட முடியாது” என்றார். ஒரு 15 நிமிஷம் கழித்து பெரிய ஆபீசர் குமாஸ்தாவை வரவழைத்து, அங்கேயே இருக்கும்படிக் கூறி சிறிய ஆபீசரைப் போனில் கூப்பிட்டார். குமாஸ்தா அன்னையிடம் கூறிய அதே செய்திகளை, அதே சொற்களால் சிறிய ஆபீசரிடம் கூறுவதை காதால் கேட்டும் குமாஸ்தாவால் நம்ப முடியவில்லை.

இதுபோன்ற சக்தி உலகிலிருப்பதாக நான் அறியவில்லை என நினைத்தார். அன்னைக்கும் இந்த சக்தியிருப்பதாக இதுவரை தாம் அறியவில்லை என ஆச்சரியப்பட்டு, விவரம் தெரிந்தவர்களை அணுகி விளக்கம் கேட்டார். அவர் பெற்ற பதில், “உண்மை உலகத்திற்குரியது, vibration of the world. மனம் பேசுவது உண்மையானால், உலகம் அதை ஏற்காது. அன்னை ஏற்பார். உங்களிடமிருந்து உண்மையை ஏற்கமுடியாத பெரிய ஆபீசர் அன்னையிடமிருந்து அதை மறுக்கமாட்டார்”.

**உண்மை உலகெங்கும் பரவும். அன்னை அதைப் பரப்புவார்.**

✯ ✯ ✯